தமிழ்நாடு வருவாய்த்துறை அலுவலர்

# சங்கக் குரல்

தமிழ்நாடு வருவாய்த்துறை அலுவலர் சங்க மாத இதழ்

ஆசிரியர் : கே.சி.ராம்குமார்

குரல் 30 செப்டம்பர் 2019 ஒலி 9



தமிழ்நாடு வருவாய்த் துறை அலுவலர் சங்கம் மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சருடன் சந்திப்பு

தனிப்பிரதி விலை ரூ.10/- ஆண்டு சந்தா ரூ.120/-



கடலூர் மாவட்ட வருவாய்த்துறை அலுவலர்களின் பல்வேறு கோரிக்கைகள் தொர்பாக,
தமிழ்நாடு வருவாய்த்துறை அலுவலர் சங்க மாநில மையத்தின் சார்பில் 3.9.2019 அன்று-
கடலூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களை சந்தித்து முறையிட்டபின் கடலூர் மாவட்ட நிர்வாகிகளுடன்,
மாநிலத் தலைவர் திரு.கு.குமரேசன் மற்றும் மாநில பொதுச் செயலாள திரு.எஸ்.பார்த்திபன்.




திருச்சிராப்பள்ளி மாவட்ட புதிய நிர்வாகிகள் பதவி ஏற்பு விழா மற்றும் துணைஆட்சியராகப் பதவி உயர்வு பெற்றவர;களுக்கு பாராட்டு விழா 31.8.2019 அன்று மாவட்டத் தலைவர் திரு.பிரகாஷ் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இதில் மாநிலத் தலைவர் திரு.கு.குமரேசன் உரையாற்றினார். உடன் மாநிலத் துணைத் தலைவர் திரு.வி.சோமசுந்தரம் மற்றும் திருச்சிராப்பள்ளி மாவட்ட புதிய நிர்வாகிகள்



திருவள்ளூர் மாவட்டத்தின் அவசர செயற்குழு 22.8.2019 அன்று நடைபெற்றது. செயற்குழுவில் எடுக்கப்பட்ட முடிவுகள் தொடர்பாக மாவட்ட ஆட்சியர் அவர்களை சந்தித்து முறையிடப்பட்டது.
இதில் மாநில பொதுச் செயலாளர் திரு.எஸ்.பார்த்திபன் கலந்து கொண்டார்

# சேவை செய்வதில் தயங்காத சங்கம்

தமிழ்நாடு வருவாய்த்துறை அலுவலர் சங்க மாநில மையத்தின் சார்பாக வாழ்த்துக்களையும் வணக்கங்களையும் தெரிவித்து கொள்கிறோம். வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறையில் நாடாளுமன்ற தேர்தல் பணிகளைத் தொடர்ந்து, PM Kisan பணி, இ-அடங்கல் பணி என பணிப்பளு நம்மை அழுத்தினாலும் வருவாய்த்துறை அலுவலர்களுக்கே உரிய கடமை உணர்வோடும், மக்களுக்கு சேவை செய்வதில் நாம் எப்போதும் தயங்கியதில்லை.

PM Kisan பணியினை ஆயிரம் சிரமங்களுக்கு மத்தியில் செய்து முடித்தோம். தற்போது இ-அடங்கல் பணி மாண்புமிகு முதல்வர் அவர்களின் சிறப்பு குறை தீர்க்கும் நாளுக்கான மனுக்கள் பெறும் பணி என்பவை நம் தோளின் மீது சுமத்தப்பட்டுள்ள வேதனையுடன் சுமந்து கொண்டு இருக்கிறோம். இந்த சிரமங்கள் குறித்து வருவாய் நிர்வாக ஆணையர், வருவாய்த் துறை செயலாளர் ஆகியோரிடம் விரிவாக எடுத்து உரைத்துள்ளோம். தொடர்ந்து தலைமை தேர்தல் அலுவலரை சந்தித்து முறையீடுகள் அளித்ததன் அடிப்படையில் தற்போது நிதி ஒதுக்கீடு வரப்பெற்று உள்ளது.

ஒவ்வொரு நிகழ்விலும் தொடர்ச்சியான முயற்சிகள் நாம் மேற்கொண்டதாலேயே சாத்தியம் ஆகியுள்ளன. துணை ஆட்சியர் பட்டியல் வெளியிட்டது. பட்டியலில் இடம் பெற்ற அனைவருக்கும் பணி இடங்கள் பெற்றுத் தந்தது, மாவட்ட வருவாய் அலுவலர் பதவி உயர்வு பெற்றுத் தந்தது உள்ளிட்டவை நமது சங்கத்தின் முயற்சியினாலேயே சாத்தியமாகியுள்ளது.

இந்திய தேர்தல் ஆணையம் பிறப்பித்த வட்டாட்சியர்கள் மாவட்டம் விட்டு மாவட்டம் மாறுதல் செய்வது என்ற உத்திரவை டெல்லிக்கே சென்று நம் தரப்பு வாதங்களை ஆணித்தரமாக எடுத்துவைத்து, உத்தரவை பிறப்பித்த தேர்தல் ஆணையமே அதனை ரத்து செய்ய வைத்த வரலாறு படைத்த பெருமை நம்மை மட்டுமே சாரும்.

மேலும் மதுரை மாவட்ட சகோதரி செல்வி சம்பூர்ணம், பதிவுரு எழுத்தர் திரு.சீனிவாசன், நமது சங்கத்தின் முன்னாள் மாநில துணைத் தலைவர் திரு.குருச்சந்திரன் ஆகியோருக்கு மீண்டும் டெல்லி சென்று முறையீடு அளித்து மீளப்பணி நியமனம் பெற்றுத் தந்திருக் கிறோம்.

தற்போது மாண்புமிகு தமிழக முதல்வர், தலைமைச் செயலாளர், பணியாளர் மற்றும் நிர்வாகத்துறை செயலாளர் ஆகியோரை சந்தித்து நமது சகோதர, சகோதரிகள் மீது ஏற்படுத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளிலிருந்து விடுவித்து, உத்தரவு பிறப்பிக்க கோரும் முயற்சிகளை மாநில மையம் தொடர்ந்து முயற்சித்து வருகிறது. இவையெல்லாம் நாம் ஒன்றுபட்டு போராட்டங்களை நடத்தியதாலும், ஒற்றுமை ஒன்றையே பிரதானமாக நாம் கடைப்பிடித்ததாலேயே சாத்தியமானது.

இப்போதும் நமது சங்கம் வலுவோடும், வளமோடும் இருக்க இந்த ஒற்றுமையே உரமாக இருக்கிறது. இந்த தருணத்தில் நாம் நமது சங்க கடமைகளையும் நிறைவேற்ற கடமைபட்டவர்களாக இருக்கிறோம். வட்டக் கிளை மாநாடுகளை நடத்தி, வட்ட நிர்வாகிகளையும், மாவட்ட மாநாடுகளை நடத்தி மாவட்ட நிர்வாகிகளையும் தேர்ந்தெடுத்து, டிசம்பரில் மாநில நிர்வாகிகள் தேர்தலை நடத்த வேண்டியுள்ளது.

மேலும் 2018-க்கான உறுப்பினர் பட்டியல் இரு பிரதிகளை மாநில மையத்திற்கு அனுப்ப வேண்டியுள்ளது, சங்கக்குரல் சந்தாதாரர் எண்ணிக்கையை உயர்த்த வேண்டியுள்ளது. மாநில மைய கட்டிட நிதியினை முழுமையாக செலுத்தி முடிக்க வேண்டியுள்ளது. வட்ட, மாவட்ட நிர்வாகிகளில் பெண் சகோதரிகளின் பெயர், சங்க பொறுப்பு, அலுவலக பதவி, அலுவலக, இருப்பிட முகவரி, தொலைபேசி எண் பெற வேண்டியுள்ளது.

எனவே எதிர்வரும் மாநில செயற்குழுவிற்கு முன்னதாக இப் பணிகள் அனைத்தையும் வட்ட, மாவட்ட நிர்வாகிகளின் ஒத்துழைப்போடு தலைவர்கள் வழியில் தொடர்ந்து பயணிப்போம். சங்கத்தின் மாண்பையும், ஊழியர் நலனையும் தொடர்ந்து பாதுகாப்போம். ஒன்றுபடுவோம்! போராடுவோம்!! முன்னேறுவோம்!!! ❖

தொலைபேசி எண் : 28593458

# தமிழ்நாடு வருவாய்த்துறை அலுவலர் சங்கம்

THE TAMILNADU REVENUE OFFICIALS' ASSOCIATION
Recognised in G.O.Ms.No.2141 Public (Service-A)
Department Dated 06.10.1966

*க.எண். 12, கிருஷ்ணப்ப தெரு, சேப்பாக்கம், சென்னை - 600 005*

# மாநில நிர்வாகிகள் கூட்ட முடிவுகள்

*நாள் : 2.9.2019*

**த**மிழ்நாடு வருவாய்த்துறை அலுவலர் சங்கத்தின் மாநில நிர்வாகிகள் கூட்டம் 31.8.2019 அன்று திருச்சிராப்பள்ளி மாநகரில் நடைபெற்றது. இக்கூட்டத்திற்கு மாநிலத் தலைவர் திரு.கு.குமரேசன் தலைமை தாங்கினார். மாநிலத் துணைத் தலைவர்கள் திரு.கே.சி.ராம்குமார் மற்றும் திரு.வாசுதேவன் ஆகியோர் தொடர்ந்து வழக்கம் போலவே கூட்டத்தில் கலந்து கொள்ளவில்லை.

மாநிலத் தலைவர் திரு கு.குமரேசன் தனது உரையில், "12.8.2019 உடுமலைப்பேட்டையில் நடைபெற்ற மாநில நிர்வாகிகள் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகள் தொடர்பாகவும், ஜாக்டோ-ஜியோ போராட்டத்தின் காரணமாக வருவாய்த்துறை அலுவலர்கள் மீது எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கை தொடர்பாகவும், இதற்கு மாநிலம் மையத்தின் சார்பில் எடுத்து வரும் நடவடிக்கைகள் தொடர்பாகவும், இணைப்புக் கட்டணம், சங்க குரல் மற்றும் மாநில மைய கட்டிட நிதி தொடர்பாக எடுக்க வேண்டிய நடவடிக்கைகளை" விவரித்தார். மாநில பொதுச் செயலாளர் திரு.சு.பார்த்திபன் தனது உரையில், "தற்போது கடலூர், ராமநாதபுரம், திருவள்ளூர், நாகப்பட்டினம் மற்றும் சிவகங்கை மாவட்டங்களில் நிலவிவரும் ஊழியர் பிரச்சனைகள், நாடாளுமன்றத் தேர்தல் நிதி முழுமையாக அளிக்கப்படாததால் ஏற்பட்டுள்ள பிரச்சனைகள் மற்றும் 2018ஆம் ஆண்டிற்கான உறுப்பினர் பட்டியலை விரைந்து உடனடியாக பெற வேண்டிய அவசியம்" குறித்தும் எடுத்துரைத்தார்.

அனைத்து மாநில நிர்வாகிகளின் கருத்துகள் அடிப்படையில் கீழ்க்கண்ட முடிவுகள் எடுக்கப்பட்டன.

1. தற்போதைய மாநில நிர்வாகிகளின் பதவி க்காலம் ஏற்கனவே இறுதியாக இரண்டாவது முறை நீட்டிக்கப்பட்ட நிலையில், வருகின்ற டிசம்பர் 2019 மாதத்திற்கு முன்பாக மாநில நிர்வாகிகள் தேர்தல் நடத்த வேண்டிய அவசியம் உள்ளது. ஆனால், தேர்தலுக்கு அடிப்படையான 2018ஆம் ஆண்டிற்கான உறுப்பினர் பட்டியல் நீலகிரி, நாமக்கல், பெரம்பலூர், திருச்சிராப்பள்ளி, நாகப்பட்டினம், தேனி, திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி ஆகிய 8 மாவட்டங்களில் இருந்து மட்டுமே வர பெற்றுள்ளது. எனவே மாநில மைய தேர்தலை உரிய காலத்தில் நடத்திட ஏதுவாக சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர், வேலூர், திருவண்ணாமலை, விழுப்புரம்,

*கடலூர், தர்மபுரி, கிருஷ்ணகிரி, சேலம், ஈரோடு, கோயம்புத்தூர், திருப்பூர், கரூர், அரியலூர், புதுக்கோட்டை, திண்டுக்கல், மதுரை, சிவகங்கை, ராமநாதபுரம், திருவாரூர், தஞ்சாவூர், விருதுநகர் மற்றும் தூத்துக்குடி ஆகிய* ***24 மாவட்டங்களுக்கான உறுப்பினர் பட்டியலை வருகின்ற 15.9.2019-க்கு முன்பாக*** *மாநில மையத்தில் ஒப்படைத்திட சம்மந்தப்பட்ட மாவட்ட நிர்வாகிகள் / பொறுப்பு மாநில நிர்வாகிகள் உடனடி நடவடிக்கையை மாவட்டங்களுக்கு நேரில் சென்று எடுக்க வேண்டும் என முடிவு செய்யப்பட்டது.*

2. *ஜாக்டோ-ஜியோ போராட்டத்தின் காரணமாக பாதிக்கப்பட்டுள்ள வருவாய்த்துறை அலுவலர்களின் பணி ஓய்வு, பதவி உயர்வு உள்ளிட்ட பணி நலன்கள் பாதிக்கப்பட்டுள்ள நிலையில் அரசின் அதிமுக்கிய பணிகளை வருவாய்த்துறை அலுவலர்கள் மேற்கொண்டு வருகின்ற நிலையில் மாவட்டங்களில் சமூக சூழல் ஏற்படும் வகையில் இதனை சிறப்பினமாகக் கருதி வருவாய் துறை அலுவலர்கள் மீது தொடரப்பட்டுள்ள நடவடிக்கை உடன் முடிவிற்கு கொணர மாண்புமிகு முதலமைச்சர் மற்றும் தலைமைச் செயலாளர் ஆகியோரை மாநிலத்தின் சார்பில் வேண்டுகோள் வைப்பது என முடிவு செய்யப்பட்டது.*

3. *கடலூர் மாவட்டத்தில் நிலவி வரும் ஊழியர் பிரச்சினை தொடர்பாக வருகின்ற* ***3.9.2019*** *அன்று மாநிலத் தலைவர், மாநில பொது செயலாளர் மற்றும் பொறுப்பு மாநில நிர்வாகி ஆகியோர் மாவட்ட நிர்வாகிகளுடன், கடலூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களை சந்தித்து சமூக முடிவு ஏற்பட முயற்சிப்பது எனவும், ராமநாதபுரம் மாவட்ட பிரச்சனை தொடர்பாக மாநில மையத்தின் சார்பில் மூன்று முறை ராமநாதபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களை சந்தித்து பிரச்சனைகளுக்குத் தீர்வு எட்டப்படாத நிலையில், ராமநாதபுரம் மாவட்ட செயற்குழுவினை பொறுப்பு மாநில நிர்வாகி பங்கேற்புடன் உடனடியாக கூட்டி அதன் அடிப்படையில் வலுவான இயக்க நடவடிக்கைகள் மேற்கொண்டு கோரிக்கைகள் மீது தீர்வு காண்பது என முடிவு செய்யப்பட்டது.*

*அதேபோன்று திருவள்ளூர், நாகப்பட்டினம், வேலூர், சிவகங்கை மாவட்டங்களில் உள்ள ஊழியர் பிரச்சனை தொடர்பாக சம்பந்தப்பட்ட மாவட்ட நிர்வாகத்துடன் பேசி தீர்வு காண்பது எனவும் முடிவு செய்யப்பட்டது.*

4. *வருவாய்த்துறை அலுவலர்களின் பொதுவான கோரிக்கைகளுக்கான கிராம நிர்வாக அலுவலர்கள், கிராம உதவியாளர் மற்றும் நில அளவை அலுவலர் சங்கங்களின் கூட்டமைப்பு ஏற்படுத்திட ஏற்கனவே முடிவு செய்யப்பட்டுள்ள நிலையில், இம்மாதத்தில் இதற்கான இறுதி வடிவம் கொடுத்து முன்னேறிச் செல்வது என முடிவு செய்யப்பட்டது.*

5. *தமிழ்நாடு வருவாய்த்துறை அலுவலர் சங்கத்தின் அடுத்த மத்திய செயற்குழுவினை ஒரு மாதத்தில் நடத்துவதென முடிவு செய்யப்பட்டது.*

6. *தற்போதைய மாநில நிர்வாகிகளில் ஒருவர் பணி ஓய்வு பெற்றும், மூவர் பதவி உயர்வு பெற்றுள்ள நிலையில், தற்போதைய மாநில நிர்வாகிகள் கீழ்க்கண்ட விவரப்படி மாவட்டங்களில் கூடுதல் பொறுப்பு வகிப்பது என முடிவு செய்யப்பட்டது.*

| வ. எண். | மாநில நிர்வாகி | பொறுப்பு மாவட்டம் | கூடுதல் பொறுப்பு மாவட்டம் |
|---|---|---|---|
| 1. | குமரேசன் | சேலம் | கோவை வேலூர் |
| 2. | பார்த்திபன் | திருவள்ளூர் காஞ்சிபுரம், வேலூர் | திருவண்ணாமலை |
| 3. | ஆர்.மங்களபாண்டியன் | சென்னை, மதுரை | கரூர் |
| 4. | வி.சோமசுந்தரம் | திருவண்ணாமலை | காஞ்சிபுரம் |
| 5. | கே.பாலமுருகன் | தூத்துக்குடி | சிவகங்கை |
| 6. | எம்.பி.முருகையன் | கன்னியாகுமரி | ராமநாதபுரம் |
| 7. | கே.தமிழ்மணி | ஈரோடு | திருச்சி |
| 8. | எல்.பிரேமசந்திரன் | கடலூர் | தஞ்சாவூர் |

7. தமிழ்நாடு வருவாய்த்துறை அலுவலர் சங்கத்தின் செயல்பாடுகளில் மகளிருக்கு உரிய பங்களிப்பு அளிப்பதுடன், சங்க கட்டமைப்பினை மேலும் வலுப்படுத்திட மகளிர் துணைக்குழு மாநில அளவில் அமைப்பது எனவும், வருகின்ற மத்திய செயற்குழுவில் மாவட்டங்களிலிருந்து மகளிர் நிர்வாகிகளின் பெயர் பட்டியலை பெற்று மகளிர் துணைக்குழு அமைத்திட நடவடிக்கை எடுப்பது என முடிவு செய்யப்பட்டது.

8. கடந்த மத்திய செயற்குழுவில் முடிவு செய்தபடி அனைத்து வட்ட கிளை மாநாடுகளை வருகின்ற 15.10.2019க்கு முன்பாக நடத்திடவும், வருகின்ற 31.12.2019க்கு முன்பாக மாவட்ட மாநாடுகளை நடத்திடவும், இதற்கு மாவட்ட மையங்கள் நிர்வாகிகள் கூட்டம்/செயற்குழு கூட்டி சரியான திட்டமிடல் செய்து பொறுப்பு மாநில நிர்வாகிக்கு முன்னதாக தகவல் அளித்து மாவட்ட மாநாடுகளை சிறப்பாக நடத்திட வேண்டும் என முடிவு செய்யப்பட்டது.

9. இளநிலை ஆய்வாளர்/தட்டச்சர் நிலைகளுக்கான காலியிட மதிப்பீடு அறிக்கை இன்றும் இறுதி செய்யப்படாத காரணத்தினால் பல மாவட்டங்களில் கருணை அடிப்படை நியமனம்/ அலுவலக உதவியாளர் பதவி உயர்வுகளில் பாதிப்பு ஏற்பட்டுள்ளதை கருத்தில் கொண்டு மேற்கண்ட நிலைகளுக்கான நடப்பாண்டு காலியிட மதிப்பீடு அறிக்கை விரைவில் வெளியிட வேண்டும். அதேபோன்று தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டு உள்ள இ-அடங்கல் திட்டப் பணிகளை கிராம நிர்வாக அலுவலர்கள், சில கோரிக்கைகளை முன்னிறுத்தி இப்பணியை பார்க்க மறுத்து வருகின்ற நிலையில், இப்பணிகளை உள் வட்ட வருவாய் ஆய்வாளர் வருவாய் வட்டாட்சியர்களை மேற்கொள்ள தொடர்ந்து நிர்பந்திப்பது முறையாகாது. எனவே இவைகளுக்கான தீர்வு காண துறைத் தலைவரை நேரில் சந்தித்து வலியுறுத்துவது என முடிவு செய்யப்பட்டது.

10. 2019 நாடாளுமன்ற பொதுத் தேர்தல் பணிகள் நிறைவடைந்து நான்கு மாதம் நிறைவடைந்துள்ள நிலையில் தேர்தல் நடத்துவதற்கான செலவின நிதி ஒதுக்கீடு பல மாவட்டங்களில் முழுமையாக வழங்கப்படாமல் உள்ளது. இதனால் மாவட்டங்களில் கடன் அடிப்படையில் பணி மேற்கொண்டு முடித்துள்ள தேர்தல்

துணை வட்டாட்சியர் மற்றும் வருவாய் வட்டாட்சியர்களுக்கு பல சிரமங்களையும், நெருக்கடிகளையும் ஏற்பட்டுள்ளது. எனவே இதற்கான நிதி ஒதுக்கீட்டினை உடனடியாக தாமதமின்றி வழங்கிட தமிழக முதன்மை தேர்தல் அலுவலரை வலியுறுத்துவது என முடிவு செய்யப்பட்டது.

11. மதுரை மாவட்ட வாக்கு எண்ணும் மையத்தில் கடந்த 20.4.2019 அன்று ஏற்பட்ட நிகழ்வுகள் தொடர்பாக வட்டாட்சியர் செல்வி சம்பூர்ணம், பதிவுரு எழுத்தர் திரு.சீனிவாசன் மற்றும் மாநகராட்சி அலுவலர் திரு.ராஜ பிரகாஷ் ஆகியோரின் இடைக்கால பணி நீக்கத்தை ரத்து செய்து மீண்டும் பணி நியமனம் வழங்கிட மாநில மையத்தின் சார்பில் மாநில செயலாளர் திரு.எம்.பி.முருகையன் கடந்த 23.7.2019 அன்று புதுடெல்லி இந்திய தேர்தல் ஆணையர் அலுவலகத்திற்கு நேரில் சென்று வலியுறுத்தப்பட்டது. இதனடிப்படையில் மேற்கண்ட மூன்று அலுவலர்களுக்கும் பணி நியமனம் வழங்க ஆணையிட்டுள்ள இந்திய தேர்தல் ஆணையம், தமிழக முதன்மை தேர்தல் அலுவலர், மதுரை மாவட்ட ஆட்சியர் உள்ளிட்ட அரசு அலுவலர்களுக்கு நன்றி தெரிவிப்பது எனவும், அதேபோன்று தனியார்கள் மீது தொடரப்பட்டுள்ள துறைவாரி நடவடிக்கைகளை நடைபெற்ற நிகழ்வுகள் உண்மை மற்றும் சட்டத்தின் அடிப்படையில் முடிவிற்கு கொணர்ந்து ஊழியர்களின் பணி நலன்களை காத்திட வலியுறுத்துவது என முடிவு செய்யப்பட்டது.

12. தமிழ்நாடு வருவாய்த்துறை அலுவலர் சங்கத்தின் மாதாந்திர இதழான ‘சங்கக் குரல்’ இதழினை புதுடெல்லி அலுவலக அனுமதியின் காரணமாக கடந்த சில காலமாக அனைத்து சந்தாதாரர்களுக்கு அனுப்ப இயலாத நிலையில், கடந்த மாதம் இது தொடர்பாக புதுடெல்லி அலுவலகத்திற்கு நேரில் சென்று சில பணிகள் மேற்கொண்டு உள்ளதன் காரணமாக ஏற்பட்டுள்ள முன்னேற்றத்தின் அடிப்படையில் நடப்பு மாதம் முதல் தொடர்ந்து சங்கக்குரல் இதழினை வெளியிடுவது என முடிவு செய்யப்பட்டது.

13. தமிழ்நாடு வருவாய்த்துறை அலுவலர் சங்க மாநில மைய கட்டடம் தொடர்பாக நிதி ஏற்படுத்திட முடிவு செய்து 20 மாதங்கள் கழிந்த நிலையில் இன்னும் சில மாவட்டங்கள் கட்டிட நிதியை முழுமையாக அளிக்காமலும், சில மாவட்டங்கள் பெயரளவிலான நீதியை மட்டும் அளித்துள்ளனர். தற்போது புதிய கட்டிடம் இரண்டாம் தளம் நிறைவடைந்த நிலையில் நிதி ஆதாரத்தின் காரணமாக கட்டுமான பணி பாதிப்படைந்துள்ளது. எனவே, மாவட்ட நிர்வாகிகள் இப்பணியின் முக்கியத்துவம் உணர்ந்து, நிலுவை நிதியினை முழுமையாக 15.10.2019 முன்பாக வழங்கிடவும், இதற்கு பொறுப்பு மாநில நிர்வாகிகள் சம்பந்தப்பட்ட மாவட்டங்களுக்கு நேரில் செல்வது எனவும் முடிவு செய்யப்பட்டது.

14. பொது சுகாதாரத்துறை அலுவலர் சங்க மாநில பொதுச் செயலாளரும், கலைக்கப்பட்ட விருதுநகர் அரசு ஊழியர் சங்கம் முன்னாள் மாவட்ட நிர்வாகியுமான திரு.லட்சுமி நாராயணன் வாட்ஸ்அப் பதிவில் வருவாய்த்துறை அலுவலர் சங்கத்தை விமர்சித்து தன்னிச்சையாக பதிவு போட்டதற்கு திரு.லட்சுமி நாராயணன் உடன் வருவாய்த்துறை அலுவலர் சங்க பொதுச்செயலாளர் பேசுவது மற்றும் பதில் கொடுப்பது எனவும் முடிவு செய்யப்பட்டது.

15. இதுவரை நிதி ஒதுக்கீடு வழங்கப்படாத PM Kisan, முதலமைச்சரின் சிறப்பு குறை தீர்க்கும் திட்டங்களுக்கு கூடுதலாக நிதி ஒதுக்கீடு மற்றும் கால அவகாசம் வழங்கி வலியுறுத்துவது எனவும் முடிவு செய்யப்பட்டது.

*16.* மாநில மைய கட்டிட நிதியில் பின்னடைவு ஏற்பட்டுள்ள மாவட்டங்களில் பணிகளை தீவிரப்படுத்தும் விதமாக கீழ்கண்ட மாநில நிர்வாகிகள் மாவட்டங்களுக்கு நேரில் சென்று பணி பார்க்க வேண்டியது என முடிவு செய்யப்பட்டது.

| **வ எண்.** | **மாவட்டம்** | **மாநில நிர்வாகி** |
|---|---|---|
| *1.* | வேலூர், திருவண்ணாமலை | எஸ்.பார்த்திபன், வி.சோமசுந்தரம் |
| *2.* | தர்மபுரி, கிருஷ்ணகிரி | குமரேசன், எஸ்.பார்த்திபன் |
| *3.* | கோவை, திருப்பூர் | ஜி.கண்ணன், ஆர்.மங்களபாண்டியன் |
| *4.* | சிவகங்கை, மதுரை | ஆர்.மங்களபாண்டியன், கே.தமிழ்மணி |
| *5.* | சென்னை | கு.குமரேசன், எஸ் பார்த்திபன், ஆர்.மங்களபாண்டியன், எம்.பி.முருகையன் |
| *6.* | கடலூர், விழுப்புரம் | எஸ்.பார்த்திபன், எல்.பிரேமசந்திரன், வி.சோமசுந்தரம், கே.பாலமுருகன் |
| *7.* | நாமக்கல் | எம்.பி.முருகையன், ஆர்.மங்களபாண்டியன் |

***(ஒம்-)***
***(சு.பார்த்திபன்)***
மாநில பொதுச் செயலாளர்

***(ஒம்-)***
***(கு.குமரேசன்)***
மாநிலத் தலைவர்

❖



# ஓர் வேண்டுகோள்

தமிழ்நாடு வருவாய்த்துறை அலுவலர் சங்க மாநில மைய புதிய கட்டடப் பணிகள், டிசம்பர் 2017 மாதம் துவக்கப்பட்டு தற்போது வரை நடைபெற்று வருகிறது. நிதி பற்றாக்குறையின் காரணமாக கட்டிடப் பணிகளில் காலதாமதம் ஏற்பட்டுள்ளது. எனவே, இப்பணிகளை விரைந்து முடித்திட, கட்டிட வளர்ச்சி ஒத்துழைப்பு அளிக்க கேட்டுக் கொள்ளப் படுகிறது.

**- மாநில மையம்**

பெறுநர் நாள் : 6.9.2019

அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்,
வருவாய் நிர்வாகம் மற்றும் பேரிடர் மேலாண்மை ஆணையர்,
சேப்பாக்கம், சென்னை 600005.

ஐயா,

பொருள் : சிறப்பு படி வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறையில் வட்டாட்சியர் நீண்ட காலமாக பெற்று வந்த சிறப்பு படியினை தொடர்ந்து உயர்த்தி வழங்க கோருவது தொடர்பாக

பார்வை : 1. அரசாணை எண். 71 நிதித் (ஊதியக்குழு) துறை, நாள் 26.2.2011
2. அரசாணை எண். 242. நிதித் (ஊதியக்குழு) துறை, நாள் 22.7.2013
3. தமிழ்நாடு வருவாய்த்துறை அலுவலர் சங்கத்தின் முறையீடு, நாள் 13.12.2017.
4. கூடுதல் தலைமைச் செயலாளர் மற்றும் வருவாய் நிர்வாகம், பேரிடர் மேலாண்மை ஆணையர் அவர்களின் கடிதம் எண். பணி 3(1)/4620/2018, நாள் 30.1.2018, 5.12.2018 மற்றும் 10.08.2019.
5. தொடர்புடைய ஆவணங்கள்

***

வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறையில் பணிபுரிந்து வரும் வட்டாட்சியர்களுக்கு அரசாணை எண். 71, நிதித்(ஊதியக்குழு)துறை, நாள் 26.2.2011இன் படி 1560039100 உதியக்கட்டில், தர ஊதியம் ரூ.5100 வழங்கி ஆணையிடப்பட்டது. இதன்பின் பல்வேறு காரணங்களால் மேற்கண்ட ஊதியம் நிறுத்தப்பட்டு, இதனை ஈடு செய்யும் வகையில் அரசாணை எண். 242, நிதித்(ஊதியக்குழு)துறை, நாள் 22.7.2013இன் படி, வட்டாட்சியர்களுக்கு சிறப்பு படியாக ரூ.1000 வழங்கப்பட்டது.

இதன் பின்பாக, அரசாணை எண். 303, நிதித்(ஊதியக்குழு)துறை, நாள் 13.10.2017 மற்றும் 306, நிதித்(ஊதியக்குழு)துறை, நாள் 13.10.2017இன் படி அரசு அலுவலர்களின் ஊதியம் மற்றும் படிகள் உயர்த்தப்பட்ட போதிலும் வட்டாட்சியர்களின் சிறப்பு ஊதியத்தைப் பற்றி எதுவும் தெரிவிக்கப்படவில்லை. இதன் காரணமாக வட்டாட்சியர்கள் நீண்ட காலமாக பெற்றுவந்த சிறப்பு ஊதியம் தற்போது கருவூலத் துறையில் அனுமதிக்கப்படாத நிலை உள்ளது.

இதனை தொடர்ந்து வழங்கவும், அரசு அலுவலர்களுக்கு ஊதிய குழுவிற்கு முன்பாக வழங்கப்பட்டு வந்த அனைத்து படிகளும் குறைந்தபட்சமாக 3 மடங்கு உயர்த்தப்பட்டுள்ள நிலையில், வட்டாட்சியர் ஏற்கனவே பெற்று வந்த சிறப்பு ஊதியத்தை பணிப்பளு மற்றும் அனைத்து விடுமுறை நாட்களிலும் கூட சட்டம்ஒழுங்கு, பேரிடர் மேலாண்மை பணி, மாண்புமிகு அமைச்சர் பெருமக்களின் விழா/நிகழ்வுகளில் கலந்து கொள்ளுதல், பொதுமக்கள் குறை தீர்க்கும் பணி என வட்டாட்சியர் நிலை அலுவலர்கள் அரசின் முகமாகவும் குரலாக அரசின் முக்கிய மற்றும் மக்கள் நல திட்டங்களை செய்து வருவதை கருத்தில் கொண்டு ரூ.5000ஆக உயர்த்த தமிழ்நாடு வருவாய்த்துறை அலுவலர் சங்கத்தின் சார்பில் கோரிக்கை வைக்கப்பட்டது.

இக்கோரிக்கையை ஏற்றுக்கொண்ட வருவாய் நிர்வாக ஆணையர் அவர்கள் வட்டாட்சியர் பெற்று வந்த சிறப்பு படியை உயர்த்தி வழங்க பார்வை 4ல் காணும் கடிதத்தில் பரிந்துரைத்து உள்ளார்கள். எனவே வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறையில் வட்டாட்சியர் மேற்கொண்டு வரும் பெரும் பணிப்பளு மற்றும் பணியின் தன்மையை கருத்தில் கொண்டும் துறைத் தலைவர் அவர்களின் பரிந்துரையின் அடிப்படையிலும் வட்டாட்சியர்கள் பெற்று வந்த சிறப்புப் அடியினை ரூ.5000 ஆக உயர்த்தி விரைவில் ஆணையிடும்படி கனிவுடன் கேட்டுக்கொள்கிறோம்.

மிக்க நன்மதிப்புடன்,

தங்கள் நம்பிக்கையுள்ள,
(ஒம்)
**(கு.குமரேசன்)**
மாநிலத் தலைவர்

**தொலைபேசி எண் : 28593458**

# தமிழ்நாடு வருவாய்த்துறை அலுவலர் சங்கம்

THE TAMILNADU REVENUE OFFICIALS' ASSOCIATION
Recognised in G.O.Ms.No.2141 Public (Service-A)
Department Dated 06.10.1966
*க.எண். 12, கிருஷ்ணப்ப தெரு, சேப்பாக்கம், சென்னை - 600 005*

*பெறுநர்* *நாள் : 6.9.2019*

*கூடுதல் தலைமை செயலாளர்/*
*வருவாய் நிர்வாகம் மற்றும் பேரிடர் மேலாண்மை ஆணையர்,*
*சேப்பாக்கம், சென்னை - 600005.*

*ஐயா,*

*பொருள் : தனி ஊதியம் - தமிழ்நாடு வருவாய் சார்நிலைப்பணி - துணை வட்டாட்சியர் நிலை - அலுவலகப் பணி மேற்கொள்ளும் துணை வட்டாட்சியர்களுக்கு நீண்ட காலமாக வழங்கப்பட்டு வந்த தனி ஊதியம் நிறுத்தப்படுவது - தொடர்ந்து வழங்க கோருவது - தொடர்பாக.*

*பார்வை : 1. அரசாணை எண் 45 நிதித் (ஊதியக்குழு) துறை, நாள் 10.2.2011.*

*2. அரசு கடிதம் எண். 34668, வருவாய் பணி 3(2) துறை, நாள் 3.3.2016*

*3. அரசு கடிதம் எண். 5001, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை பணி 3(2) துறை, நாள் 23.2.2018*

*4. இணை ஆணையர் (வருவாய் நிர்வாகம்) கடிதம் எண். 3(2)/557/2013, 9.11.2018.*

*5. தொடர்புடைய ஆவணங்கள்*

★★★

*வணக்கம். பார்வையில் காணும் குறிப்புகளை காண வேண்டுகிறோம்.*

*பார்வை 3-ல் காணும் அரசு கடிதம் மற்றும் பார்வை 4-ல் காணும் வருவாய் நிர்வாக ஆணையரின் கடிதங்களின் காரணமாக தற்போது அலுவலகத்தில் பணிபுரியும் அனைத்து துணை வட்டாட்சியர்களுக்கும் வட்டாட்சியர் அலுவலகத்தில் பணிபுரியும் தலைமையிடத்து துணை வட்டாட்சியர், மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் பணிபுரியும் பிரிவு தலைமை எழுத்தர் (துணை வட்டாட்சியர் நிலை) உள்ளிட்டோருக்கு தனி ஊதியம் ரூ.500 (தற்போது ரூ.1300ஆக உயர்த்தப்பட்டுள்ளது) மறுக்கப்பட்டு வருவது தொடர்பாக கீழ்கண்ட விபரங்களை தெரிவிக்க விரும்புகிறோம்.*

*அரசாணை எண் 45 நிதித் (ஊதியக் குழு) துறை, நாள் 10.2.2011-ல் வருவாய் துறையில் பணிபுரியும் துணை வட்டாட்சியர்களின் பணிப் பளு மற்றும் பணியின் தன்மையைக் கருதி துணை வட்டாட்சியர் பதவி வகிப்பவர்களுக்கு தனி ஊதியமாக ரூ.500 வழங்கலாம் என்றே ஆணையிடப்பட்டுள்ளது. இவ்வரசாணையில் இந்தத் தனி ஊதியமாக ரூ.500 களப்பணி மேற்கொள்ளும் துணை வட்டாட்சியர்களுக்கு மட்டுமே வழங்க வேண்டும் என்றோ அலுவலகப் பணி மேற்கொள்ளும் துணை வட்டாட்சியர்களுக்கு வழங்கக்கூடாது என்றோ தெரிவிக்கவில்லை. துணை வட்டாட்சியர் நிலையில் பணிபுரியும் அனைத்து நிலை அலுவலர்களுக்கும் வழங்க*

வேண்டும் என்றே ஆணையிடப்பட்டுள்ளது. மேலும், மேற்கண்ட அரசாணையில் இந்த தனி ஊதியமானது வரும் காலங்களில் ஆண்டு ஊதிய உயர்வுக்கும், அகவிலைப்படிக்கும், ஓய்வூதிய பலன்களுக்கும் கணக்கில் கொள்ளப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆனால், பார்வை 3 மற்றும் 4-ல் காணும் கடிதங்களின் காரணமாக, தற்போது வருவாய்த் துறையின் அலுவலகங்களில் பணிபுரியும் துணை வட்டாட்சியர்களான "வட்டாட்சியர் அலுவலக - தலைமையிடத்து துணை வட்டாட்சியர்", "மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் பணிபுரியும் பிரிவு தலைமை உதவியாளர், தனி அலுவலகங்களில் பணிபுரியும் கண்காணிப்பாளர் உள்ளிட்டோருக்கு தனி ஊதியம் மறுக்கப்பட்டு வருகின்றது. மேலும் இப் பணியிடங்களில் பணிபுரிந்து பணி ஓய்வு பெற்றுள்ள அலுவலர்களுக்கு ஓய்வூதியத் தொகை கணக்கில் எடுத்துக் கொள்ளப்படாதது நியாயமற்றதாகும்.

இப்பொருள் தொடர்பாக குறிப்பிடப்பட்டுள்ள மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் பிறப்பிக்கப்பட்டுள்ள அணைகளில் கூட "வருவாய் நிர்வாக இணை ஆணையரின் 6.6.2013ஆம் தேதிய கருத்துருக்களை பரிசீலனை செய்து விதிகளின் அடிப்படையில் உரிய ஆணைகளை பிறப்பிக்க" மட்டுமே தெரிவிக்கப்பட்டுள்ளது.

உண்மை நிலை இவ்வாறு இருக்க அலுவலக பணி பார்க்கும் துணை வட்டாட்சியர்களுக்கு ஒட்டுமொத்தமாக தனி ஊதியம் வழங்க மறுப்பது சரியாக அமையாது என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

2011ஆம் ஆண்டு அரசாணை எண். 45 வெளியிடப்பட்ட தற்கு பின்பாக வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறையில் தகவல் உரிமைச் சட்ட மனுக்கள் நீதிமன்ற வழக்குகளை நேரில் சென்று கையாளுதல், சென்னை தலைமை செயலகம் மற்றும் துறை தலைமை அலுவலகங்களுக்கு ஆய்வுக் கூட்டங்களில் கலந்து கொள்ளுதல், பொதுமக்கள் குறை களைதல், பேரிடர் மேலாண்மைப் பணி, அனைத்துத்துறை அலுவலர்களிலும் ஒருங்கிணைப்பு மற்றும் புள்ளி விவரம் சேகரிப்பு செய்வது, வாக்காளர் பட்டியல் திருத்தப் பணி, சட்டம் ஒழுங்கு பராமரிப்பு என பணிப் பளு மற்றும் பணியின் தன்மை பன்மடங்கு அதிகரித்துள்ளது. இத்தகைய பணிகளில் மற்றும் மனு நீதி நாள் முகாம் மாண்புமிகு அமைச்சர் பெருமக்களின் விழாக்களை ஒருங்கிணைப்பு செய்திடும் பொறுப்பு துணை வட்டாட்சியர்களுக்கே வழங்கப்படுகிறது.

தற்போது தமிழக அரசின் முக்கிய திட்டமாக அறிவிக்கப்பட்டுள்ள "மாண்புமிகு முதலமைச்சரின் சிறப்பு குறை தீர்க்கும் திட்டம்", ஊரக வளர்ச்சித் துறை, பொதுப்பணி துறை, சுகாதாரத் துறை என பல்வேறு துறைகள் சம்பந்தப்பட்டிருந்தாலும் இப்பணிகளை ஒருங்கிணைப்பு செய்திடும் பொறுப்பு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறைக்கே வழங்கப்பட்டுள்ளது.

இவ்வாறாக வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறையில் அதிலும் குறிப்பாக துணை வட்டாட்சியர்களுக்கு தனி ஊதியம் ரூ.1300 வழங்க மறுப்பது சரியாக அமையாது என்பதை கருத்தில் கொண்டு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறையில் பணிபுரியும் அனைத்து துணை வட்டாட்சியர் நிலை அலுவலர்களுக்கும் தனி ஊதியம் ரூ.1300 தொடர்ந்து வழங்க உடன் ஆணைகள் வழங்குமாறு கனிவுடன் கேட்டுக்கொள்கிறோம்.

இத்துடன் பார்வையில் காணும் அரசாணை அரசு கடிதங்கள் மற்றும் நீதிமன்ற தீர்ப்புகளை இணைத்துள்ளோம்.

மிக்க நன்மதிப்புடன்,

தங்கள் நம்பிக்கையுள்ள,

(ஒம்-)

**(கு.குமரேசன்)**

மாநிலத் தலைவர்

**தொலைபேசி எண் : 28593458**

# தமிழ்நாடு வருவாய்த்துறை அலுவலர் சங்கம்

THE TAMILNADU REVENUE OFFICIALS' ASSOCIATION
Recognised in G.O.Ms.No.2141 Public (Service-A)
Department Dated 06.10.1966

*க.எண். 12, கிருஷ்ணப்ப தெரு, சேப்பாக்கம், சென்னை - 600 005*

---

*பெறுநர்* *நாள் : 6.9.2019*

*அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்,*
*வருவாய் நிர்வாகம் மற்றும் பேரிடர் மேலாண்மை ஆணையர்,*
*சேப்பாக்கம்,*
*சென்னை - 600005.*

*ஐயா,*

*பொருள் : பேரிடர் மேலாண்மை - வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை - மாவட்டங்களில் பல்வேறு பேரிடர் மேலாண்மை பணிகள் மேற்கொள்ளப்படுவது - கடலோர மாவட்டங்களுக்கு துணை ஆட்சியர் நிலையில் சிறப்பு பணியிடங்கள் கோருவது - தொடர்பாக.*

*பார்வை : 1. தமிழ்நாடு வருவாய்த்துறை அலுவலர் சங்கம் முறையீடு, நாள் 5.12.2017.*

*2. அரசாணை எண். 2676, வருவாய்த்துறை, நாள் 1.12.1980*

*3. அரசாணை எண். 249, வருவாய்த்துறை, நாள் 27.5.2003*

*4. அரசாணை எண். 181, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, நாள் 9.5.2017.*

*5. அரசாணை எண். 444, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, (பணி பரி, பணி 5), நாள் 8.11.2018.*

*6. தொடர்புடைய ஆவணங்கள்.*

***

*வணக்கம். பார்வையில் காணும் குறிப்புகளைக் காண வேண்டுகிறோம்.*

*பார்வை 2-ல் காணும் வருவாய் வாரியம் (Board of Revenue) கலைக்கப்பட்டு, வருவாய்த்துறையில் வருவாய் நிர்வாகம், நில நிர்வாக ஆணையரகங்கள் உருவாக்கப்பட்டது. அதன் பின்பாக பார்வை 3-ல் காணும் அரசாணையில், வருவாய் நிர்வாகத்துறை என்பது “வருவாய் நிர்வாகம் பேரிடர் மேலாண்மை மற்றும் தணிக்கும் துறை” என பெயர் மாற்றம் செய்யப்பட்டது. பார்வை 4-ல் காணும் அரசாணையின்படி, தலைமைச் செயலகத்தில் உள்ள வருவாய்த்துறை என்பது வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை என மாற்றம் செய்யப்பட்டது. இறுதியாக பார்வையில் காணும் அரசாணையின்படி துறை தலைமை என்பது “வருவாய் நிர்வாகம், பேரிடர் மேலாண்மை ஆணையரகம்” என பெயர் மாற்றம் செய்யப்பட்டது.*

*இவ்வாறு கால சூழ்நிலைக்கேற்பவும், பேரிடர் மேலாண்மை பணிகளுக்கு முக்கியத்துவம் அதிகரித்து வருவதன் காரணமாகவும், வருவாய்த் துறையில் மாற்றங்கள் செய்யப்பட்டன. ஆனால்*

*மாவட்ட அளவில் வருவாய்த்துறையில், அதிலும் குறிப்பாக பேரிடர் மேலாண்மை பிரிவு மாற்றங்கள் ஏதும் செய்யப்படாமல் உள்ளது என்பதை தெரிவிக்க வேண்டுகிறோம்.*

*சமீபகாலமாக தமிழகத்தில் பல்வேறு இயற்கை சீற்றங்கள் பொதுமக்கள் உயிருக்கும் உடமைக்கும் பெரும் பாதிப்புகளை உருவாக்கியுள்ளது. 2004 சுனாமி பேரிடர், 2011 தானே புயல், 2012 சிவகாசி வெடிவிபத்து, 2014 மௌலிவாக்கம் கட்டிட இடிபாடு, 2015 பெருவெள்ளம், 2016 வர்தா புயல், 2017 ஒக்கி புயல், 2018 குரங்கணி தீ விபத்து மற்றும் கஜா புயல் என தமிழகத்தில் பேரிடர்கள் தொடர்கின்றன. இவைகளைத் தவிர 2014ஆம் ஆண்டு ஏற்பட்ட வறட்சி நிவாரண பணிகள், கோடை காலங்களில் ஏற்படும் குடிநீர் பற்றாக்குறை ஒருங்கிணைப்பு பணிகள், 2017ஆம் ஆண்டு டெங்கு உள்ளிட்ட தொற்று நோய் தடுப்பு ஒருங்கிணைப்பு பணிகள் என அனைத்து விதமான மேலாண்மை மற்றும் நிவாரணப் பணிகள் பேரிடர் மேலாண்மை பிரிவு அலுவலர்களால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.*

*ஆனால் மாவட்ட வருவாய் அலகுகளில் பேரிடர் மேலாண்மைப் பணிகளில் ஒரு வட்டாட்சியர் பணியிடம் மட்டுமே வழங்கப்பட்டுள்ளது. இதனால் பேரிடர் காலங்களில் பல துறைகளை ஒருங்கிணைத்து போர்க்கால அடிப்படையில் பணிகளை மேற்கொள்வது பெரும் சவாலாக உள்ளது. மேலும் பேரிடர் மேலாண்மை பணிகளுக்கு போதிய அலுவலர் இல்லாத காரணங்களால், பணிகளில் அவ்வப்போது தொய்வு ஏற்படுகிறது.*

*எனவே ஒவ்வொரு மாவட்டத்திலும் முதற்கட்டமாக பேரிடர் பாதிப்புக்கு ஆளாகக்கூடிய கடலோர மாவட்டங்களுக்கு துணை ஆட்சியர் நிலையில் அலுவலரை நியமித்து "மாவட்ட பேரிடர் மேலாண்மை அலுவலகம்" என்ற தனி அமைப்பை உருவாக்க வேண்டியது மிக மிக அவசியமாகிறது.*

*பேரிடர் காலங்களில் பல்வேறு துறைகளை அதாவது பொதுப்பணித் துறை, தீயணைப்புத் துறை, காவல் துறை, ஊரக வளர்ச்சித் துறை, பொது சுகாதாரத் துறை, கல்வித் துறை மற்றும் பல்வேறு அரசு சாரா அமைப்புகள் ஒருங்கிணைக்கும் பணி என்பது துணை ஆட்சியர் நிலையிலான அலுவலக வேலையை திறம்பட மேற்கொள்ள முடியும். மேலும் பேரிடர் அவசர காலங்களில் அரசின் அறிவுரைகளை முழுமையாக செயல்படுத்துவதோடு தேவையான புள்ளிவிவரம்/தகவல்களை உடனுக்குடன் அளிப்பது, அரசால் ஒருங்கிணைப்பு அலுவலராக நியமனம் செய்யப்படும் மூத்த இந்திய ஆட்சிப்பணி அலுவலரின் வழிகாட்டுதல்களைப் பின்பற்றி, மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளை மேற்கொள்வது, மாவட்ட ஆட்சித் தலைவருடன் இணைந்து துரிதமாக பேரிடர் மேலாண்மை மற்றும் பணிகளை மேற்கொள்ள துணை ஆட்சியர் நிலையிலான அலுவல்களாலேயே இயலும்.*

*எனவே, மேற்கண்ட விவரங்களை கருத்தில் கொண்டு ஒவ்வொரு மாவட்டத்தில் முதற்கட்டமாக பேரிடர் பாதிக்கக்கூடிய கடலோர மாவட்டங்களுக்கு துணை ஆட்சியர் நிலையில் அலுவலர்கள் நியமனம் செய்யும்படி கனிவுடன் கேட்டுக்கொள்கிறோம்.*

*மேலும் பேரிடர் மேலாண்மை மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளில் ஏற்படும் தாமதம் என்பது பொது மக்களின் உயிர் மற்றும் உடமைகள் அந்த பட்டதாக உள்ளதால் துணை ஆட்சியர் நிலையில் அலுவலர்களை விரைவில் நியமனம் செய்யுமாறு பணிவுடன் கேட்டுக்கொள்கிறோம்.*

*மிக்க நன்மதிப்புடன்,*

*தங்கள் நம்பிக்கையுள்ள,*

*(ஒம்-)*

***(கு.குமரேசன்)***

*மாநிலத் தலைவர்*

**தொலைபேசி எண் : 28593458**

# தமிழ்நாடு வருவாய்த்துறை அலுவலர் சங்கம்

THE TAMILNADU REVENUE OFFICIALS' ASSOCIATION
Recognised in G.O.Ms.No.2141 Public (Service-A)
Department Dated 06.10.1966
*க.எண். 12, கிருஷ்ணப்ப தெரு, சேப்பாக்கம், சென்னை - 600 005*

---

*பெறுநர்* *நாள் : 6.9.2019*

*அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்,*
*வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை யிவீஷ்.*
*தலைமைச் செயலகம், சென்னை - 600009.*

*ஐயா,*

*பொருள் : தகுதிகாண் பருவம் - தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் மூலமாக நியமனம் செய்யப்பட்ட இளநிலை வருவாய் ஆய்வாளர் மற்றும் தட்டச்சர் தகுதி காண் பருவம் ஆணை வெளியிடும் அதிகாரம் மாவட்ட ஆட்சியருக்கு வழங்குவது - ஆணைகள் வேண்டுதல் - தொடர்பாக.*

*பார்வை : மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை அமைச்சர் அவர்களின் சட்டமன்ற அறிவிப்பு, நாள் 27.6.2018. தொடர்புடைய ஆவணங்கள்.*

***

*வணக்கம். தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் மூலமாக நியமனம் செய்யப்பட்ட இடைநிலை வருவாய் ஆய்வாளர்கள் மற்றும் தட்டச்சர் பதவி அதிகாரத்தை மாவட்ட ஆட்சியருக்கு வழங்க மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்களால் தமிழக சட்டமன்றத்தில் கடந்த 26.6.2018 அன்று அறிவிக்கப்பட்டது. ஆனால் இந்த அறிவிப்புகள் வெளியிடப்பட்டு ஓராண்டிற்கு மேலான நிலையில் இதற்கான அரசாணை இதுவரை வெளிவராமல் உள்ளது.*

*மேலும் தமிழ்நாடு வருவாய்த்துறை அலுவலர் சங்கத்தின் சார்பில் ஏற்கனவே முறையீடு செய்யப்பட்டு அதன் அடிப்படையில் தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்தின் மூலம் நியமனம் செய்யப்பட்ட நிலையில் வருவாய் ஆய்வாளர், தட்டச்சர் மட்டுமின்றி கருணை அடிப்படையில் மற்றும் பதவி உயர்வில் நியமனம் செய்யப்படும் இளநிலை வருவாய் ஆய்வாளர், தட்டச்சர்கள் மற்றும் நேரடி நியமன உதவியாளருக்கு தகுதிகாண் பருவம் அதிகாரத்தை மாவட்ட ஆட்சியருக்கு வழங்கும் ஆணை விரைவில் வழங்குமாறு பணிவுடன் கேட்டுக்கொள்கிறோம்.*

*மேலும் சில ஆண்டுகளாக தொடர்ந்து நிலுவையிலுள்ள இனங்களை, சிறப்பினமாகக் கருதி ஒரு குறிப்பிட்ட தேதி வரை (விதி தளர்வு இல்லாத தேர்வுகளில் மொத்தமாக பணிவரன்முறை செய்து அரசாணை வெளியிட்டது போன்று) தகுதி காண் பருவம் ஆணை வெளியிட கனிவுடன் கேட்டுக்கொள்கிறோம்.*

*மிக்க நன்மதிப்புடன்,*

*தங்கள் நம்பிக்கையுள்ள,*
*(ஒம்-)*
***(கு.குமரேசன்)***
*மாநிலத் தலைவர்*

**தொலைபேசி எண் : 28593458**

# தமிழ்நாடு வருவாய்த்துறை அலுவலர் சங்கம்

THE TAMILNADU REVENUE OFFICIALS' ASSOCIATION
Recognised in G.O.Ms.No.2141 Public (Service-A)
Department Dated 06.10.1966

*க.எண். 12, கிருஷ்ணப்ப தெரு, சேப்பாக்கம், சென்னை - 600 005*

---

*பெறுநர்* *நாள் : 5.9.2019*

*அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்,*
*வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை.*
*தலைமைச் செயலகம், சென்னை - 600009.*

*ஐயா,*

*பொருள் : புதிய மாவட்டங்கள் - தமிழகத்தில் கள்ளக்குறிச்சி, தென்காசி, செங்கல்பட்டு, ராணிப்பேட்டை மற்றும் திருப்பூர் மாவட்டங்களை உருவாக்கம் செய்தல் - அனைத்து நிலைகளிலும் போதிய பணியிடங்கள் ஏற்பட்ட கோருதல் - தொடர்பாக*

*பார்வை : தொடர்புடைய ஆவணங்கள்*

***

*வணக்கம். தமிழக அரசு கள்ளக்குறிச்சி, தென்காசி, செங்கல்பட்டு, ராணிப்பேட்டை மற்றும் திருப்பூர் மாவட்டங்களை விரிவாக்கம் செய்திட அறிவித்து அதற்கான நடவடிக்கையை தீவிரப்படுத்தி உள்ளது.*

*மக்கள் தொகை அடிப்படையில் புதிய மாவட்டங்கள் உருவாக்கப்பட வேண்டும் என்று தமிழ்நாடு வருவாய்த்துறை அலுவலர் சங்கத்தின் நீண்டநாள் கோரிக்கை ஏற்கப்பட்டுள்ளதை வரவேற்கிறோம். அதேவேளையில், புதிய மாவட்டங்கள் உருவாக்கிடும் அறிவிப்பானது பொதுமக்கள் மற்றும் வருவாய்த்துறை அலுவலர்கள் பயன்பெறும் வகையில் அனைத்து நிலைகளிலும், அலுவலக உதவியாளர் முதல் துணை ஆட்சியர் நிலை வரை புதிய பணியிடங்கள் வழங்க வேண்டுமென்று கனிவுடன் கேட்டுக்கொள்கிறோம்.*

*மிக்க நன்மதிப்புடன்,*

*தங்கள் நம்பிக்கையுள்ள,*
*(ஒம்-)*
***(கு.குமரேசன்)***
*மாநிலத் தலைவர்*

# நன்றி

மதுரை வாக்கு எண்ணும் மையத்தில் ஏற்பட்ட பிரச்சனையின் காரணமாக இடைக்கால பணி நீக்கம் செய்யப்பட்ட மதுரை வட்டாட்சியர் செல்வி சம்பூர்ணம் உள்ளிட்ட அலுவலர்களுக்கு பணி நியமனம் வழங்கிட தமிழ்நாடு வருவாய் துறை அலுவலர் சங்கத்தின் சார்பில் புதுடெல்லி இந்திய தலைமை ஆணையத்தின் உயர் அலுவலர்களை நேரில் சந்தித்து முறையிடப்பட்டது. இதனை ஏற்று செல்வி சம்பூர்ணம், பதிவுரு எழுத்தர் சீனிவாசன் மற்றும் மாநகராட்சி அலுவலர் ராஜபிரகாஷ் ஆகியோருக்கு பணி நியமனம் வழங்கியுள்ள இந்திய தேர்தல் ஆணையம், தமிழக முதன்மை தேர்தல் அலுவலர், மதுரை மாவட்ட ஆட்சியர் உள்ளிட்ட அனைத்து அரசு அலுவலர்களுக்கும் மாநில மையத்தின் சார்பில் மனமார்ந்த நன்றிகள் தெரிவிக்கப்படுகிறது.

தொலைபேசி எண் : 28593458

# தமிழ்நாடு வருவாய்த்துறை அலுவலர் சங்கம்

THE TAMILNADU REVENUE OFFICIALS' ASSOCIATION
Recognised in G.O.Ms.No.2141 Public (Service-A)
Department Dated 06.10.1966
க.எண். 12, கிருஷ்ணப்ப தெரு, சேப்பாக்கம், சென்னை - 600 005

பெறுநர் நாள் : 6.9.2019

அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்,
வருவாய் நிர்வாகம் மற்றும் பேரிடர் மேலாண்மை ஆணையர்,
சேப்பாக்கம்,
சென்னை - 600005.

ஐயா,

பொருள் : சிறப்புத் திட்டம் - மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் சிறப்பு குறை தீர்க்கும் திட்டம் - அதிகப்படியான மக்கள் வரவேற்பை பெற்றுள்ளது - போதிய கால அவகாசம் வழங்க கோருவது - தொடர்பாக.

பார்வை : அரசாணை எண் 296, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை வ.நி.3(2) துறை, நாள் 17.8.2019 தொடர்புடைய ஆவணங்கள்.

***

வணக்கம்.

பார்வையில் காணும் அரசாணையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் சிறப்பு குறை தீர்க்கும் திட்டத்தின்கீழ் கடந்த 3 வாரங்களாக மனுக்கள் பெறப்பட்டு வருகின்றது. இத்திட்டத்தில் பல்லாயிரக்கணக்கான மக்கள் வரப்பெற்றுள்ளதால் இன் மனுக்களை இணையதளத்தில் ஏற்றியே சம்பந்தப்பட்ட துறைக்கு அனுப்பி, மனுக்களின் மீது தல விசாரணை செய்து தீர்வு கண்டு ஆணைகள் பிறப்பித்து அதனை சம்பந்தப்பட்ட ஆவணங்களில் பதிவு செய்து பயனாளிகளுக்கு வழங்கிட 30 நாள் கால அவகாசம் என்பது போதுமானதாக இல்லை.

அரசின் புதிய திட்டமாக நடைமுறைப்படுத்தப்படும் இத்திட்டத்திற்கு அதிக எண்ணிக்கையில் வரப்பெற்று உள்ளதாலும் இன் மனுக்களை பரிசீலனை செய்து தீர்வு காண போதிய அவகாசம் அளித்தால் மட்டுமே இத்திட்டத்தின் நோக்கம் நிறைவேறுவதாக அமையும், இத்திட்டத்தின் பயன்களும் பொதுமக்களுக்கு முழுமையாக கொண்டு சேர்த்திட இயலும்.

எனவே மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் சிறப்பு திட்டத்தை முழுமையாகவும் வெற்றிகரமாகவும் செயல்படுத்திட கூடுதலான கால அவகாசம் குறைந்தபட்சமாக 75 நாட்கள் வழங்கிட உரிய ஆணைகளை அரசிடம் பெற்றுத் தருமாறு கனிவுடன் கேட்டுக்கொள்கிறோம்

மிக்க நன்மதிப்புடன்,

தங்கள் நம்பிக்கையுள்ள,
(ஒம்-)
**(கு.குமரேசன்)**
மாநிலத் தலைவர்

**தொலைபேசி எண் : 28593458**

# தமிழ்நாடு வருவாய்த்துறை அலுவலர் சங்கம்

THE TAMILNADU REVENUE OFFICIALS' ASSOCIATION
Recognised in G.O.Ms.No.2141 Public (Service-A)
Department Dated 06.10.1966
*க.எண். 12, கிருஷ்ணப்ப தெரு, சேப்பாக்கம், சென்னை - 600 005*

*நாள் : 5.9.2019*

*பெறுநர்*

*அரசு செயலாளர்*
*பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத்துறை*
*தலைமைச் செயலகம்*
*சென்னை - 600 009.*

*அன்புடையீர்*

*பொருள் : பொதுப்பணி - வருவாய்த் துறை அலுவலர்களின் பணி ஒய்வு மற்றும் பதவி உயர்வு பாதிக்கப்பட்டுள்ளது - தீர்வு வழங்க கேட்டால் தொடர்பாக*

*பார்வை : தொடர்புடைய ஆவணங்கள்*

***

*வணக்கம்.*

*தமிழக அரசின் அதிக முக்கியத்தும் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை அலுவலக வேலையை திறம்பட செயல்படுத்தப்பட்டு வருகின்றது. நாடாளுமன்ற, சட்டமன்ற பொதுத்தேர்தல், பேரிடர் மேலாண்மை, சட்டம் ஒழுங்கு பராமரிப்பு, பொது மக்கள் குறைதீர்வு, முக்கிய பிரமுகர் வருகைப் பணி என வருவாய்த்துறை அலுவலர்கள் வருடத்தின் அனைத்து நாட்களிலும் அரசு பணியை செவ்வனே செய்து வருகின்றனர்.*

*தமிழகத்தின் முன்னாள் முதல்வர் பெருமதிப்பிற்குரிய மாண்புமிகு செல்வி ஜெ.ஜெயலலிதா அவர்கள் 2014ஆம் ஆண்டு தமிழக சட்டமன்றத்தில் வருவாய்த்துறையை கீழ்க்கண்டவாறு குறிப்பிட்டார்கள்.*

***"அனைத்து துறைகளுக்கும் தாய்த் துறையாகவும், அரசின் முதுகெலும்பாகவும் விளங்கும் வருவாய்த்துறையை வலுபடுத்த என்னுடைய அரசு அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகின்றது. வருவாய்த்துறையானது ஏழை எளிய மக்களின் வாழ்வினை மேம்படுத்தும் அடித்தட்டு மக்களின் குறைகளை களைகின்ற துறையாகவும் விளங்குகிறது"***

*இத்தகைய சிறப்பு பெற்ற வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறையில் தனித்துவம் மற்றும் முக்கியத்துவம் கருதி தற்போதைய முதலமைச்சர் அவர்கள், "மாண்புமிகு முதலமைச்சரின் சிறப்பு குறை தீர் திட்டம்", அனைத்து துறைகள் தொடர்புடையதாக இருந்த போதிலும் இதை ஒருங்கிணைத்து செயல்படுத்துகின்ற துறையாக வருவாய் மற்றும் மேலாண்மை துறை தேர்வு செய்துள்ளார்கள்.*

*இவ்வாறாக வருவாய்த்துறை அலுவலர்கள், அரசு விடுமுறை, பண்டிகை நாள் என எவ்வித விலக்கின்றி 365 நாட்களும் 24X7 அரசு பணி பார்த்து வருகின்ற நிலையில், இத் துறை அலுவலர்களின் பணி ஓய்வு மற்றும் பதவி உயர்வு சில மாவட்டங்களில் பாதிக்கப்படுவது ஒட்டுமொத்த வருவாய்த்துறை அலுவலர் இடையே மன வேதனையையும் வருத்தத்தையும் மன அழுத்தத்தையும் ஏற்படுத்யுள்ளதை அரசின் கனிவான பரிசீலனைக்கு முன்வைக்க விரும்புகிறோம்.*

*அதிலும் திருவள்ளூர், வேலூர், திருச்சிராப்பள்ளி, சிவகங்கை, விருதுநகர், கரூர் உள்ளிட்ட சில மாவட்டங்களில் மட்டும் கடந்த 2019 ஜனவரி நடைபெற்ற போராட்டத்தின் காரணமாக சில அலுவலர்களுக்கு குற்றக் குறிப்பாண சார்வு செய்யாத நிகழ்வுகளில் கூட பணி ஓய்வு / பதவி உயர்வு அளிக்க மறுத்து வருவது வருவாய்த்துறை அலுவலர்கள் மத்தியில் தொடர் விரக்தியை ஏற்படுத்தி உள்ளது.*

*எனவே எவ்வித பிரதிபலனோ எதிர்பார்ப்பின்றி தமிழக அரசின் ஆணைக்களுக்கிணங்க மக்கள் சேவை செய்து வரும் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை அலுவலர்களின் மன சோர்வை நீக்கி மேலும் சிறப்புடன் அரசு பணியில் ஈடுபடும் விதமாக மேற்கண்ட காரணங்களால் பாதிக்கப்பட்டுள்ள வருவாய்த்துறை அலுவலர்களின் சுமூக பணி ஓய்வு மற்றும் பதவி உயர்வுக்கு உரிய தீர்வு காணுமாறு வேண்டிக் கேட்டுக்கொள்கிறோம்.*

*மிக்க நன்மதிப்புடன்,*

*தங்கள் நம்பிக்கையுள்ள,*

*(ஒம்-)*

***(கு.குமரேசன்)***

*மாநிலத் தலைவர்*

---

# TNROA சந்திப்புகளும் முறையீடுகளும்

*தமிழ்நாடு வருவாய் துறை அலுவலர் சங்கம் மாநில மையத்தின் சார்பில் 5.9.2019, 6.9.2019 ஆகிய இரண்டு நாட்கள் வருவாய்த்துறை அலுவலர்கள் கோரிக்கைகள் தொடர்பாக அரசு செயலாளர் மற்றும் ஆணையர்கள் உள்ளிட்ட உயர் அலுவலர்களை சந்தித்து முறையீடு அளிக்கப்பட்டு கோரிக்கைகளை விரைந்து நிறைவேற்ற வலியுறுத்தப்பட்டது.*

***5.9.2019***

*முதல் நாள் முதன்மை தேர்தல் அலுவலரை சந்தித்து மதுரை மாவட்ட வட்டாட்சியர் சம்பூரணம் மற்றும் இருவரின் இடைக்கால பணி நீக்கத்தை ரத்து செய்து விரைவாக பணி நியமனம் வழங்கியதற்கு நன்றி தெரிவிக்கப்பட்டது. நாடாளுமன்ற தேர்தலுக்கு நிலுவையாக உள்ள தேர்தல் நிதியை உடனடியாக வழங்க வலியுறுத்தப்பட்டது. மேலும் 14 மாவட்டங்களில் நேர்முக உதவியாளர் (தேர்தல்) பணியிடங்களை விரைவாக வழங்க வலியுறுத்தப்பட்டது. இச்சந்திப்பின்போது வருகின்ற வரைவு வாக்காளர் பட்டியல் வெளியிடும் நாள் (15.10.2019) முதலாகவே வாக்காளர் பட்டியல் திருத்தப் பணிகளில் தொடர்புடையபணியிடங்களுக்கான தடையாணை வர உள்ளதாக தெரிவிக்கப்பட்டது.*

இதன் பின்னர் வருவாய்த்துறை செயலாளர் அவர்களை சந்தித்து, மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்களால் ஏற்கனவே சட்டமன்றத்தில் அறிவிக்கப்பட்ட இளநிலை/முதுநிலை வருவாய் ஆய்வாளர், தட்டச்சர்களின் தகுதிகாண் பருவத்தை விளம்புகை செய்யும் அதிகாரத்தை மாவட்ட ஆட்சியருக்கே வழங்குவது தொடர்பாகவும், அண்ணா மேலாண்மை பயிற்சி மையத்தில் வருவாய்த்துறை அலுவலர்களை பணி நியமனம் செய்வது தொடர்பாகவும், புதிய மாவட்டங்கள் உருவாக்கத்தின் போது அனைத்து நிலைகளிலும் போதுமான பணியிடங்கள் வழங்க வேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டது.

வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை உயர் அலுவலர்களின் சந்திப்பின்போது வருவாய்த்துறையில் அலுவலக உதவியாளர் மற்றும் பதிவு எழுத்தர் நிலையில் வெளிமுகமை (out-sourcing) மூலமாக பணி நியமனம் செய்வதற்கான நடவடிக்கை தற்போது இல்லை என தெரிவிக்கப்பட்டது.

பின்பாக பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத்துறை செயலாளர் அவர்களிடம் ஜாக்டோ-ஜியோ போராட்டத்தின் காரணமாக பாதிக்கப்பட்டுள்ள வருவாய்த்துறை அலுவலர்களின் பிரத்தியேக தன்மையை கருத்தில் கொண்டு சுமூகமான பணி ஓய்வு மற்றும் பதவி உயர்வு வழங்க வேண்டும் என வலியுறுத்தி முறையீடு அளிக்கப்பட்டது.⋆

***6.9.2019***

இரண்டாம் நாளில் வருவாய் நிர்வாக ஆணையர் இணை ஆணையர் உள்ளிட்ட உயர் அலுவலர்களை சந்தித்து அலுவலகத்தில் பணிபுரியும் துணை வட்டாட்சியர்களுக்கு சம்பகாவமாக மறுக்கப்பட்டு வரும் தனி ஊதியம் மற்றும் வட்டாட்சியர்களுக்கு வழங்கப்பட்டுவந்த சிறப்புபடிதொடர்பாகவிரிவாகவிவாதிக்கப்பட்டு முறையீடும்அளிக்கப்பட்டது.⋆

மேலும் மாண்புமிகு முதலமைச்சரின் சிறப்பு குறை தீர்க்கும் திட்டத்தில் அதிகப்படியான மக்கள் வரப்பட்ட பின் காரணமாக மனுக்கள் மீது விரிவான விசாரணை மேற்கொண்டு ஆணை பிறப்பிக்க எதுவாக இத்திட்டத்தை முழுமையாக செயல்படுத்த போதுமான கால அவகாசமும் கூடுதலான நிதியும் வேண்டி முறையிட அளிக்கப்பட்டது.

இது தவிரவும் நீண்ட காலமாக நிலுவையில் உள்ள கடலோர மாவட்டங்களுக்கான பேரிடர் மேலாண்மை பணியிடங்களை உருவாக்கிட விரிவான முறையீடு அளிக்கப்பட்டது.

இச்சந்திப்பின்போது வருவாய் ஆய்வாளர், தட்டச்சர் காலியிட மதிப்பீடு அறிக்கை 2 தினங்களில் அனுப்பப்படும் என்றும் வட்டாட்சியர் பட்டியலுக்கான காலியிடங்கள் நடப்பு வாரத்தில் இறுதி செய்து அனுப்பப்படும் என்றும், இதர கோரிக்கைகள் மீது விரைவாக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக தெரிவிக்கப்பட்டது.

கடலூர், இராமநாதபுரம், நாகப்பட்டினம், வேலூர், திருவள்ளூர் உள்ளிட்ட மாவட்டங்களில், நிலவிவரும் ஊழியர் பிரச்னைகள் குறித்து விரிவாக எடுத்துரைத்து சுமூக தீர்வு காண வலியுறுத்தப்பட்டது.

கடந்த இரண்டு தினங்கள் சந்திப்பு மற்றும் விரிவான விவாதங்கள், வருவாய்த்துறை அலுவலர்களின் நீண்டநாள் கோரிக்கைகளை முன்னேற்றம் ஏற்படுத்துவதாக அமைந்துள்ளது.⋆

நமது கோரிக்கைகள் தொடர்பாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும் தலைமைச் செயலாளர் அவர்களையும் விரைவில் சந்திக்க உள்ளோம்.

தொடர்ந்து முயல்வோம், முன்னேறுவோம்!

நம்பிக்கையுடன்,
மாநில மையம்.

# பெருமைப்பட வைத்திருக்கிறீர்கள் பி.வி.சிந்து!



உலக பேட்மின்ட்டன் போட்டியில் சாம்பியன் பட்டம் பெற்று புதிய சாதனை படைத்து இந்தியர்களை மகிழ்ச்சியிலும் பெருமையிலும் ஆழ்த்தியிருக்கிறார் பி.வி.சிந்து. இதுவரை எந்த இந்திய வீரர் அல்லது வீராங்கனையும் இதைச் சாதித்ததில்லை. பேட்மிண்டனின் இந்திய முகமாக அறியப்பட்ட பிரகாஷ் படுகோன், பி.கோபிசந்த் கூட 'அனைத்து இங்கிலாந்து' சாம்பியன்ஷிப் போட்டிகள் வரையில்தான் முன்னேறினார்கள்.

சுவிட்சர்லாந்து நாட்டின் பேசல் நகரில் நடந்த இறுதி ஆட்டத்தில் ஜப்பானின் நொசோமி ஒகுஹறா, 38 நிமிடம் நடந்த ஆக்ரோஷமான ஆட்டத்தில் சிந்துவிடம் தோற்றார். 2016 ஒலிம்பிக் போட்டி, 2017, 2018 உலக சாம்பியன் போட்டிகள், 2018 காமன்வெல்த், ஆசியப் போட்டிகளில் இறுதிச் சுற்றில் தோல்வியையே சந்தித்தார் சிந்து. இதனால், மிகப் பெரிய போட்டிகளின் இறுதிச் சுற்றில் வெற்றிபெறும் உந்துதல், ஆற்றல் குறைவாக இருக்கிறது என்று அவரை விமர்சித்தார்கள். 217, 217 என்ற கணக்கில் இறுதிச் சுற்றில் வென்று அவர்களுக்கெல்லாம் பதில் அளித்துவிட்டார்.

2006ல் பேட்மின்ட்டன் போட்டியில் ஒரு ஆட்டத்துக்கு 21 புள்ளிகள் என்று தீர்மானித்த பிறகு, இந்த அளவுக்குத் திட்டவட்டமாக மகளிர் பிரிவு போட்டியில் யாருமே சாம்பியன் ஆனதில்லை. இந்தப் பருவத்தில் சிந்து எல்லாப் போட்டியாளர்களையும் நன்றாகவே எதிர்கொண்டார். காலிறுதிச் சுற்றில் டாய் சுயிங்யிடம் ஒரு ஆட்டத்தை மட்டுமே இழந்தார். அரை இறுதிப் போட்டியில் உலகின் 3வது இட ஆட்டக்காரரான சென் யுஃபெயை அப்படியே தூக்கிவீசிவிட்டார் என்றுதான் சொல்ல வேண்டும்.

2020 ஒலிம்பிக் போட்டியில் தங்கம் வெல்லும் வாய்ப்பு சிந்துவுக்கு அதிகரித்திருக்கிறது. சிந்து இப்போது தனது ஆட்டத்திறனின் உச்சத்தில் இருக்கிறார். எந்தப் போட்டியாக இருந்தாலும் அவர் வெற்றியை ஈட்டுவார் என்பது நிச்சயம். சிந்துவின் இந்த வெற்றி, இந்திய இளம் மகளிருக்கு மிகப் பெரிய உற்சாகத்தை நிச்சயம் அளித்திருக்கிறது. சிந்து, சாய்னா நெவாலைத் தவிர, உலகின் முதல் 60 வீராங்கனைகள் பட்டியலில் வேறு இந்தியப் பெண்கள் இல்லை என்பதைப் பார்க்கும்போது சிந்துவின் வெற்றி முக்கியமாகிறது.

மகளிர் பிரிவில் மட்டுமல்ல, ஆடவர் பிரிவிலும் புதிய வீரர்கள் முன்னுக்கு வர வேண்டும். பி.சாய் பிரணீஷ் பேசலில் நடந்த போட்டியில் அரை இறுதி வரை முன்னேறினார். உலக பேட்மின்ட்டன் போட்டிகளில் இந்திய வீரர்கள் பேசப்படும் அளவுக்கு அவர்களை முன்னுக்குக் கொண்டுவந்த முதன்மை தேசியப் பயிற்றுநர் கோபிசந்தும் மிகவும் பாராட்டுக்குரியவர். அவரிடம் பயிற்சி பெற்ற சிந்து, அவருக்கும் இந்தியாவுக்கும் பெருமை சேர்த்திருக்கிறார். இந்தியா இதுவரை உலகுக்கு அளித்த மிகச் சிறந்த விளையாட்டு வீராங்கனைகளில் சிந்துவும் ஒருவர் என்பதில் நாம் பெருமைகொள்ளலாம். ❖

---

# “சங்கக்குரல்” சந்தாதாராவீர்!

*மத்திய அரசின் கொள்கை முடிவின்படி அனைத்து பத்திரிக்கைகளும் திருத்திய பதிவு செய்ய வேண்டுமெனவும் அப்படி செய்தால் மட்டுமே பத்திரிக்கைகளை தொடர்ந்து வெளிக்கொணர இயலும் என்ற அடிப்படையில் தமிழ்நாடு வருவாய்த்துறை அலுவலர் சங்கத்தின் போர்வாள் -சங்கக் குரல் இதனை தொடர்ந்து உறுப்பினர்களிடம் சேர்த்திட கடந்த மாதம் புதுடெல்லி அலுவலகத்திற்கு நேரில் சென்று பணிகள் மேற்கொள்ளப்பட்டதன் விளைவாக நடப்பு மாதம் முதல் சங்கக்குரல் இதழில் தடை ஏதுமின்றி தொடர்ந்து உறுப்பினர்களில் வந்தடையும் என ஆசிரியர் குழுவின் சார்பில் தெரிவிக்கப்படுகிறது மேலும் 12000 உறுப்பினர்களைக் கொண்ட நமது சங்கத்தில் சங்கக்குரல் சந்தா சில ஆயிரங்கள் உள்ளது இதனால் பத்திரிக்கை அச்சடிக்கும் செலவு மிக அதிகமாகிறது எனவே சங்கத்தின் உறுப்பினர்கள் அனைவரையும் விடுதல் இன்றி சங்கக்குரல் சந்தாதாரராக சேர்த்திட ஆக்கபூர்வ முயற்சிகளை மாவட்ட/ வட்டக்கிளை நிர்வாகிகள் எடுக்க கேட்டுக்கொள்ளப்படுகிறது.*

❖

# நேர்மை உறங்குவதில்லை



குஜராத் மாநிலம், போர்பந்தரில் பிறந்த மோகன்தாஸ் கரம்சந்த் காந்தி ராஜ்காட்டில் பள்ளிப் படிப்பைத் தொடர்ந்தார். படிப்பில் அவர் மத்திய தர மாணவராகவே விளங்கினார். யாருடனும் சரியாக பழகாதவராகவும், வெட்கம் நிறைந்தவராகவும் அவர் இருந்தார்.

ஒரு முறை அவர் படித்த பள்ளிக்கு ஆங்கிலேயே கல்வி அதிகாரி பள்ளியை ஆய்வுச் செய்ய வந்திருந்தார். ஒவ்வொரு வகுப்பாக சென்று மாணவர்களின் அறிவுத் திறனை சோதனைச் செய்தார்.

மோகன்தாஸ் படிக்கும் வகுப்புக்கும் அந்த அதிகாரி வந்து ஐந்து வார்த்தைகளைச் சொல்லி மாணவர்களை எழுதுமாறு கூறினார். அந்த வார்த்தைகளில் ஒன்று "கெட்டில்' என்பதாகும்.

அதனை மோகன்தாஸ் தவறாக எழுதினார். அப்போது அங்கே வந்த வகுப்பு ஆசிரியர், மோகன்தாஸ் தவறாக எழுதியிருப்பதைச் சுட்டிக்காட்டி அவரது கால்களை அழுத்தினார். ஆனாலும், மோகன்தாஸ் அதைப் பொருட்படுத்தவில்லை.

காப்பி அடித்து எழுதுவது தவறு என்று மோகன்தாஸ் எண்ணினார். "கெட்டில்' என்ற வார்த்தையை அவரைத் தவிர மற்ற மாணவர்கள் அனைவரும் சரியாக எழுதியிருந்தார்கள்.

அந்த அதிகாரி மோகன்தாஸை குறை சொல்லாமல் "கெட்டில்' ஸ்பெல்லிங்கை சரியாக எழுதிக் காட்டி திருத்தினார். அந்த அதிகாரி சென்ற பிறகு மோகன்தாஸை ஆசிரியர் கடிந்துக் கொண்டாலும், அவரது நேர்மையை பாராட்டி வாழ்த்தினார்.

காந்தி தமது ஆசிரியரிடம் பெருமதிப்பு கொண்டிருந்தார். பள்ளியில் நடந்த இந்த நிகழ்ச்சியை வாழ்நாள் முழுவதும் அவர் நினைவில் வைத்திருந்தார்.

மோகன்தாஸின் பள்ளிப் பருவத்தில் நடந்த இந்த நிகழ்ச்சி அவரது பிற்கால வாழ்விற்கு அடித்தளமாக அமைந்து, அரசியலில் நேர்மையையும், வாய்மையையும் அவர் தொடர்ந்து கடைபிடித்ததாலேயே தேசப் பிதாவாக மாறினார். தேவையில்லாமல் ஒன்றை நாம் வைத்திருந்தால் அதுவும் திருட்டுக்குச் சமம் என்றார் காந்திஜி.

இன்று ஒழுக்கம், நேர்மை இவற்றைக் காணுவது என்பது அரிதாகவே உள்ளது. ஒழுக்கம், நேர்மை உடையவர்கள் பரிதாபத்திற்குரியவர்களாகப் பார்க்கப்படுகிறார்கள். அவர்களுக்கு உரிய அங்கீகாரம் கிடைக்கப் பெறுவதில்லை. மாறாக வெறுத்து ஒதுக்கப் படுகிறார்கள்.

பணம் கொடுத்தால் பொய் சாட்சி சொல்வது, பிறர் சொத்தை அபகரிக்க நினைப்பது, ஒரு பொய்யையே பலமுறை சொல்லி அதை உண்மையாக்குவது, சுயநலத்தோடு வாழ்வது, மனசாட்சியை கொன்று பிறர் நாணுமாறு செயல்களைச் செய்வது, வழக்குரைஞர்களே அநீதிக்காக வாதாடுவது, படித்தவர்களும், பணக்காரர்களும் பதவிக்காகவும், புகழுக்காகவும் தங்கள் கௌரவத்தை இழந்து ஈனச் செயல்களைச் செய்வது, நேர்மையற்ற தீயவர்கள் வைப்பதே சட்டம் என்பது அதிகரித்து வருவது போன்றவை நல்ல சமுதாயத்திற்கு அடையாளமல்ல.

தீய செயல்கள் செய்பவர்களிடையே இருக்கும் ஒற்றுமை நேர்மையானவர்களிடம் காணப்படுவதில்லை. காரணம், நேர்மையான வர்கள் சிலராகி, நேர்மையற்றவர்கள் பலராகி விட்டதுதான்.

இத்தகையவர்களுக்குத்தான் சமுதாயத்தில் பயம் கலந்த மரியாதை கொடுக்கப்படுகிறது. இதனால், நேர்மையான எண்ணம் கொண்ட வர்கள் பயந்து விலகி விடுகிறார்கள். நல்ல வர்கள் தீமையை எதிர்த்து சண்டை யிடுவது அரிது.

ஏனெனில் அதனால் வெற்றியைவிட அவர்களுக்கு அவமானம்தான் மிஞ்சும். நேர்மையானவர்களுகே நெருக்கடி, அச்சுறுத்தல் கொடுக்கப்படுகிறது. இத்தகைய போக்கு ஜனநாயகத்திற்கு உகந்ததல்ல.

இவ்வாறு நேர்மை உறங்கும்போது அநியாயம் விழித்தெழும் என்பது தான் காலம் காட்டும் உண்மை. ஆனால், இன்றும் நேர்மை உறங்கவில்லை என்பதை சமீபத்தில் குஜராத் மாநிலம், சூரத்தில் நடந்த சம்பவம் நினைவுப் படுத்துகிறது.

சூரத் நகரைச் சேர்ந்த ஃபுல்சந்த் என்பவர் சாதாரண காவலாளி. இவரது மகன் சிறுவன் விஷால். இவர்களது குடும்பம் மிகவும் வறுமை வாடியது.

குஜராத்தைச் சேர்ந்தவர் மன்சுக்பாய் சவாலியா. வைர வியாபாரத்தில் இடைத் தரகராகச் செயல்பட்டு வரும் இவர் சூரத் நகருக்கு பணி நிமித்தமாகச் சென்றார். வர்த்தகர் ஒருவரிடமிருந்து வைரக் கற்களை அவர் வாங்கி வந்தபோது வழியில் ஒரு பையைத் தவற விட்டு விட்டார்.

அப்போது அங்கே விளையாடிக் கொண் டிருந்த 15 வயது சிறுவன் விஷால், அதை எடுத்துச் சென்று தனது தந்தையான ஃபுல்சந்திடம் காண்பித்தான். அது விலை மதிப்பு மிக்க வைரம். அவர் நினைத்திருந்தால் அதை மறைத்து பெரிய பணக்காரராகி இருக்கலாம்.

ஆனால், அவர் அவ்வாறு செய்யாமல் அதை உரியவரிடம் ஒப்படைக்க முடிவு செய்தனர். வைரத்தைத் தொலைத்த மன்சுக்பாயும் அதை பல்வேறு இடங்களில் தேடி அலைந்து சோர்ந்துள்ளார். இந்நிலையில் விஷாலும், அவனது தந்தையும் சூரத் வைர வியபாரிகள் சங்கத்தில் கண்டெடுக்கப்பட்ட வைரங்கள் அடங்கிய பையை ஒப்படைத்தனர். அதை மன்சுக்பாயிடம் சங்க நிர்வாகிகள் வழங்கினர்.

சிறுவனின் நேர்மையைப் பாராட்டும் வகையில் அவனது கல்விச் செலவை ஓராண்டுக்கு சூரத் வைர வியாபாரிகள் சங்கமே ஏற்கும் என அறிவித்துள்ளது. பெற்றோர் களிடம் நேர்மை இருந்தால் தான் பிள்ளை களிடமும் நேர்மை இருக்கும்.

வறுமையிலும் நேர்மையாக நடந்து கொண்டதற்காக அச்சிறுவனுக்கு இப்போது பாராட்டுகள் குவிந்து கொண்டிருக்கின்றன. மகிழ்ச்சியாக வாழ வேண்டும், முன்னேற வேண்டும் என்ற விருப்பம் உடையவர் முதலில் நேர்மையானவராக இருக்க வேண்டும்.

பிறர் பொருளின் மீது ஆசை கொள்ளாத வராக இருக்க வேண்டும். நேர்மையற்ற வர்களின் உள்ளம் எதிர்காலத்தையே அழித்து விடும்.

❖

சங்க குரல் இதழுக்கான கட்டுரைகள், கவிதைகள், மாவட்ட நிகழ்வுகளை தொடர்ந்து அனுப்பவும். மாநில மைய கட்டிட நிதி நிலுவையில் உள்ள மாவட்டங்கள் நிலுவையை நேர் செய்யவும். நிதி வழங்காத மாவட்டங்கள் உடனடியாக வழங்கிடவும், 2018ஆம் ஆண்டிற்கான உறுப்பினர் பட்டியலை விரைவில் அனுப்பிடவும் கேட்டுக் கொள்கிறோம்.

- மாநில மையம்

# Chandrayaan 2

The Indian Research Space Organization is undoubtedly one of the world's most technologically advanced space agencies. Even though its budget is just a fraction of what NASA gets, the space agency has proven that innovative technology can help you achieve the same objectives at a much lower cost.

ISRO's Chandrayaan mission is one such example. Launched in October of 2008, this is India's first mission to the moon. The launch of Chandrayaan 1 marked the start of India's first-ever lunar program.

**Chandrayaan 1**

Chandrayaan 1 was launched on 22 October 2008 from Satish Dhawan Space Centre, Sriharikota. It used the indigenously developed Polar Satellite Launch Vehicle (PSLV-XL) rocket. Chandrayaan 1 was based on an Indian meteorological satellite by the name of Kalpansat.

The spacecraft successfully entered the lunar orbit on 8 November 2008 and just six days later, released its Moon Impact Probe. The Moon Impact Probe crashed near the Shackleton crater on the same day. The Impact Probe crashed in such a way that the subsurface lunar soil could be analyzed for traces of ice.

It carried a total of 11 payloads not only from ISRO but from various space agencies, including NASA, the European Space Agency and the Bulgarian Aerospace Agency.

Hovering just 100 kms above the Moon's surface, Chandrayaan 1 took numerous high-resolution images of the Moon's topography. It also performed mineralogical mapping and scoured the surface for any radioactive elements.

One of the mission's major achievements was the discovery of a large number of water



molecules present in the Moon's soil. The mission cost a mere $56 million and gave us crucial information about the Moon's surface.

**Chandrayaan 1 - Success or failure?**

Scientists speculate that frozen water near the Moon's south pole can be used for a variety of purposes such as generation of rocket fuel, drinking purpose, oxygen generation and to grow plants.

In August 2009, Chandrayaan 1 lost contact with the ground station when it was hovering 200 km above the Moon's surface. After a while, ISRO officially declared that the mission was over.

Though the probe was expected to last two years, numerous technical issues such as failure of the star sensors and inadequate thermal shielding shortened the lifespan of the spacecraft to just 312 days.

However, 95% of the mission objectives were already achieved. The project was a huge step forward not only for ISRO but also for the world. It paved the way for future lunar explorations.

Following the success of Chandrayaan 1, the way for Chandrayaan 2 was cleared.

## Chandrayaan 2

Chandrayaan 2 was launched on July 22 from the same launch pad from which Chandrayaan 1 had taken off. Instead of using the outdated PSLV rocket used earlier, the spacecraft made use of the advanced Geosynchronous Satellite Launch Vehicle Mark III (GSLV Mk III).

The spacecraft is expected to land on the Moon's on September 7, 2019. According to NASA, the Moon's polar craters have the Solar System's lowest temperature. It will be the first probe in the world which will land on the lunar south pole. The main mission objective is the exploration of lunar water near the polar region.

Also, ISRO plans to test the capabilities of its lunar rover named Pragyan. Weighing 27kg, the rover operates on solar power and travels at a speed of 1cm per second. It will continuously perform chemical analysis of the soil and send back to the lander (named Vikram), which will update the ground station.

It is expected that the rover will operate for 14 days but the duration may vary since Pragyan uses solar power to keep itself up.

Unlike last time, ISRO declined to carry any foreign payloads due to weight restrictions. But in June 2019, it agreed to carry a small laser retroreflector from NASA. The orbiter will carry eight payloads, while the lander is carrying three and the rover just two.

However, the orbiter will be hovering over the moon at a distance of 100km and performing passive experiments just like it did on Chandrayaan 1.

Chandrayaan 2 has successfully entered space. That being said, the most critical part will be the auto soft-landing. If the spacecraft lands successfully on the Moon, India will be the fourth country to join the moon club after China, the United States and Russia.

The entire Chandrayaan 2 mission cost approximately $141 million. This is less than every instalment in the Marvel Avenger series.

Unlike Chandrayaan 1, the stakes are pretty high this time since the spacecraft is also carrying a lunar rover, orbiter and a lander. Moreover, Chandrayaan 2 is the country's first time using self-manufactured components and design vehicles.

The launch is significant for a number of reasons, including the fact that, for the first time in Indian history, a space mission is spearheaded by two women. Chandrayaan-2 is led by Muthayya Vanitha and RituKaridhal, the project director and mission director, respectively.

## India's Space Technology at the Global level

Even if the mission ends up in failure, ISRO will have a lot to learn from its experiences, motivating it to do better in the future. India is the only country in the world which successfully completed its maiden interplanetary mission to Mars.

Mangalyaan was launched in 2013 and has completed almost four years in Mars' orbit. This was a proud moment in the history of the organization since no other space agency has been able to achieve this feat.

It also holds the world record for launching the most satellites in a single mission. Even though ISRO lacks the resources and money compared to what NASA gets, it is continually proving its dominance in the world with its innovative cost-effective solutions.

Currently, with a budget of $1.2 billion, ISRO is ranked at number 5 in the world while having almost a fraction of the budget when compared to other space agencies.

❖

# அண்ணா எனும் மூன்றெழுத்து



அறிஞர் அண்ணா என அழைக்கப்பட்ட காஞ்சிபுரம் நடராஜன் (கா.ந.) அண்ணா துரை நடுத்தர வர்க்க குடும்பத்தில் பிறந்தவர்.

அரசியலில் இறங்கு வதற்கு முன்பு ஒரு ஆசிரிய ராகவும், பத்திரிகையாள ராகவும் பணியாற்றினார். திராவிட கட்சி, திராவிட கழகம் மூலம் தன்னுடைய அரசியல் வாழ்க்கையை தொடர்ந்த அண்ணாதுரை பிறகு தன்னுடைய ஆதரவாளர்களுடன் திராவிட முன்னேற்ற கழகம் (தி.மு.க) என்ற கட்சியை உருவாக்கினார். அரசியல் உலகில் மிகவும் செல்வாக்குப் பெற்று விளங்கிய அண்ணாவின் மறைவிற்குப் பின், இவரது பெயரால் 'அண்ணா திராவிட முன்னேற்ற கழகம்' (அதிமுக) என்ற கட்சி எம். ஜி. ராமச்சந்திரனால் 1972ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது.

தமிழக முதல்வராக தன்னுடைய முதல்வர் பணியை சிறப்பாகச் செய்த அண்ணாவின் புகழ் உலகெங்கும் பரவியது. இவர் நவீன இந்தியாவின் செல்வாக்கு மிகுந்த, வலிமையான அரசியல் தலைவர்களுள் ஒருவராகக் கருதப்படுகிறார். அது மட்டுமல்லாமல் இவர் அனைவ ராலும் பாராட்டுப் பெற்ற ஒரு சிறந்த பேச்சாளராகவும், தமிழ் மற்றும் ஆங்கில இலக்கிய எழுத்தாளராகவும் மேடை நாடகராகவும் புகழ் பெற்றார்.

அண்ணா அவர்கள் நடராஜன் மற்றும் பங்காரு அம்மாளுக்கு மகனாக செப்டம்பர் 15, 1909 இல் காஞ்சிபுரத்தில் பிறந்தார். இவர் தனது படிப்பை சென்னையிலுள்ள பச்சையப்பா உயர்நிலைப் பாடசாலை யில் தொடங்கினார். தன்னுடைய குடும்ப பொருளாதார சூழ்நிலை காரணமாக தனது படிப்பை பாதியில் நிறுத்திவிட்டு, காஞ்சிபுரம் நகராட்சி அலுவலகத்தில் எழுதுவினைஞராக வேலை புரிந்தார். பிறகு அவர் தன்னுடைய பட்டப் படிப்பை பச்சையப்பா கல்லூரியில் தொடர்ந்தார்.

1930 இல் தனது 21வயதில் ராணியை மணம் முடித்தார். பின்னர் 1934ல் பி.ஏ (சிறப்பு) பட்டமும், பிறகு எம்.ஏ (பொருளாதாரம் மற்றும் அரசியல்) முதுகலை பட்டமும் பெற்றார். தன்னுடைய கல்லூரி வாழ்க்கைக்குப் பிறகு ஆங்கில ஆசிரியராக பச்சையப்பன் உயர்நிலைப் பாடசாலையில் தனது ஆசிரியர் பணியை தொடர்ந்தார். ஆனால் குறுகிய காலத்திலேயே ஆசிரியர் தொழிலை விட்டு பத்திரிகை மற்றும் அரசியலில் ஈடுபாடு கொண்ட அண்ணா முழு அரசியல்வாதியாக தன்னுடைய வாழ்க்கைப் பயணத்தை தொடங்கினார்.

தனது கல்லூரி வாழ்க்கைக்குப் பிறகு அரசியலில் ஈடுபட மிகவும் ஆர்வம் கொண்ட அண்ணா 1934 ஆம் ஆண்டு கோயமுத்தூர் மாவட்டம் திருப்பூரில் நடந்த ஒரு இளைஞர் மாநாட்டில் பெரியாரை முதலில் சந்தித்தார். பெரியாருடைய கொள்கை அவரை ஈர்த்தது. அதனால் பெரியாரின் நீதி கட்சியில் சேர்ந்து அரசியல் பணி யாற்றினார்.

பிறகு பெரியாருக்கும் அண்ணாவுக்கும் ஏற்பட்ட கருத்து வேறுபாட்டால் நீதி கட்சியிலிருந்து பிரிந்து 'திராவிட முன்னேற்ற கழகம்' (தி.மு.க) என்ற தனது சொந்த கட்சியை 1949 இல் உருவாக்கினார். நீதி கட்சி பத்திரிகையின் உதவி ஆசிரியராக இருந்த இவர், பிறகு விடுதலை மற்றும் அதன் துணை பத்திரிகையான குடியரசு பத்திரிகைக்கு ஆசிரியராக பணியாற்றினார். அது மட்டுமல்லாமல் 'திராவிட நாடு' என்ற தலைப்பில் ஒரு தமிழ் இதழையும் தொடங்கினார்.

## தமிழக முதல்வராக அண்ணா

1967ஆம் ஆண்டு நடந்த தேர்தலில் காங்கிரஸ் கட்சியை எதிர்த்து ஒன்பது மாநிலங்களில் தி.மு.க வெற்றி பெற்றது. ஆனால் காங்கிரஸ் கட்சி சென்னையில் மட்டுமே வெற்றி பெற்றது. இந்த வெற்றியின்மூலம் 1967 பெப்ரவரியில் சென்னை மாநில அமைச்சர் ஆனார் அண்ணா. ஆட்சிப் பொறுப்பை ஏற்றதும் சுயமரியாதைத் திருமணங்களை சட்டபூர்வமாக்கி தனது திராவிடப் பற்றை உறுதிப்படுத்தினார்.

மேலும் மதராஸ் மாநிலம் என்றிருந்த சென்னை மாகாணத்தை 'தமிழ்நாடு' என்று பெயர் மாற்றி தமிழக வரலாற்றில் நீங்கா இடம் பெற்றார். அது மட்டுமல்லாமல் கர்நாடகா, ஆந்திர பிரதேசம், மற்றும் கேரளா போன்ற அண்டை மாநிலங்களில் நிலவும் மூன்று மொழி திட்டத்துக்கு எதிராக தமிழ், ஆங்கிலம் என்ற இரு மொழி கொள்கையை அமுல்படுத்தினார்.

பின்னர் ஜனவரி 3, 1968ஆம் அண்டு 'இரண்டாம் உலக தமிழ் மாநாடு' நடத்தப்பட்டது. 1968இல் 'யேல்' என்ற அமெரிக்க பல்கலைக்கழகம் இவருக்கு 'சுபப் பெல்லோஷிப்' என்ற விருதை வழங்கி கௌரவித்தது. இந்த விருதை பெற்ற அமெரிக்கர் அல்லாத ஒரு இந்தியர் என்ற பெருமையை தேடித் தந்தது. பின்னர் அதே ஆண்டில், அவருக்கு அண்ணாமலை பல்கலைக்கழகத் தின் மூலமாக கௌரவ முனைவர் பட்டமும் வழங்கப் பட்டது.

## அண்ணாவின் இலக்கியப் பங்களிப்பு

அண்ணா அரசியல் வாழ்க்கையைத் தவிர, நாடகங்களுக்கும், திரைப்படங்களுக்கும் திரைக்கதைகள் எழுதும் திறமை படைத்தவராக விளங்கினார். அது மட்டுமல்லாமல் அண்ணாதுரை ஒரு மிகச் சிறந்த தமிழ் சொற்பொழிவாளரும், மேடைப் பேச்சாளரும் ஆவார்.

அவர் தனக்கே உரித்தான தனிப்பட்ட பாணியில் அனைவரையும் கவர்கின்ற வகையில் பேசும் திறன் மற்றும் எழுத்தாற்றலும் பெற்றவராக விளங்கினார். அவர் பல நாவல்கள், சிறுகதைகள், மற்றும் அரசியல் சார்ந்த மேடை நாடகங்களையும் எழுதினார். அவர் தனது சொந்த நாடகங்களில் நடித்தும் உள்ளார். மேலும் 1948இல் எழுதப்பட்ட இலட்சிய வரலாறு மற்றும் வாழ்க்கைப் புயல், ரங்கோன் ராதா, பார்வதி பி.ஏ., கலிங்கா ராணி, பாவையின் பயணம் இவரின் முக்கிய படைப்புகளாகும்.

## அண்ணாவின் திரைப்பட வாழ்க்கை

1948 ஆம் ஆண்டு 'நல்லதம்பி' என்ற திரைப்படத்தை முதன் முதலில் அரங்கேற்றினார். இந்த படம் ஜமீன்தாரி ஒழிப்புமுறையை வலியுறுத்தி எடுக்கப்பட்ட திரைப்பட மாகும். இந்தப் படத்தில் என்.எஸ். கிருஷ்ணன் முக்கிய கதாபாத்திரத்தில் நடித்துள்ளார். இந்த படம் இவருக்கு 12,000 ரூபாயை பெற்றுத் தந்தது. இது அந்த நேரத்தில் ஒரு பெரிய தொகையாகும்.

அதுமட்டுமல்லாமல் இவரின் மிகச்சிறந்த நாவலான வேலைக்காரி (1949) மற்றும் ஓர் இரவு போன்ற நாவல்கள் திரைப்படமாக எடுக்கப்பட்டன. இத்தகைய திரைப்பட பணியின் மூலமாக இ.நாராயணசுவாமி, கே.ஆர்.ராமசாமி, என்.எஸ்.கிருஷ்ணன், எஸ்.ராஜேந்திரன், சிவாஜி கணேசன், மற்றும் எம்.ஜி.ஆர் போன்ற திரை நட்சத்திரங்களின் ஆதரவு இவருக்கு கிடைக்கப் பெற்றது.

## இறப்பு

இரண்டு ஆண்டு காலம் தமிழக முதல்வராகப் பணியாற்றிய அண்ணாதுரை 1969ஆம் ஆண்டு பிப்ரவரி 3ஆம் தேதி இறந்தார். அவர் புற்றுநோயால் அவதிபட்டுக் கொண்டிருந்த போதிலும், தன்னுடைய உடலை ஆரோக்கியமாக வைத்துக் கொண்டார். அவருக்கு புகையிலை மெல்லும் பழக்கம் இருந்தது.

அவரின் இறுதி மரியாதையில் பெருந்திரளான மக்கள் கலந்து கொண்டனர். இந்நிகழ்வு 'கின்னஸ் உலக சாதனை புத்தகத்தில்' இடம்பெற்றுள்ளது. அவரது இறுதி ஊர்வலத் தில் சுமார் 15 மில்லியன் மக்கள் கலந்து கொண்டு இறுதி மரியாதை செலுத்தினர். இவருடைய உடல் சென்னையி லுள்ள மெரினா கடற்கரையில் அடக்கம் செய்யப்பட்டது. அதன் பிறகு இவரின் நினைவைப் போற்றும் வகையில் இவ்விடம் 'அண்ணா சதுக்கம்' என்ற பெயரில் பொது மக்கள் அஞ்சலி செலுத்தும் வகையில் அமைக்கப்பட் டுள்ளது.

## நினைவுகளை பறைசாற்றும் சின்னங்கள்

திமுகவில் கட்சி பிளவு ஏற்பட்டு நடிகர் எம்.ஜி.ஆரால் 1972ஆம் ஆண்டு அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்ற கழகம் (அ.இ.அ.தி.மு.க) என்ற புதிய கட்சி அண்ணாவின் பெயரால் உருவாக்கப்பட்டது. அண்ணாவை நினைவு கூரும் வகையில் சென்னையி லுள்ள ஒரு குடியிருப்புக்கு 'அண்ணா நகர்' என பெயரிடப் பட்டுள்ளது. அதுமட்டுமல்லாமல் தமிழ்நாட்டின் முதன்மை யான தொழில்நுட்பப் பல்கலைக்கழகத்திற்கு 'அண்ணா பல்கலைக்கழகம்' என்று பெயர் சூட்டப்பட்டுள்ளது.

சென்னையில் உள்ள தற்போதிய திமுக தலைமைச் செயலக கட்டிடத்துக்கு அவரின் நினைவாக 'அண்ணா அறிவாலயம்' என்றும் பெயர் சூட்டப்பட்டுள்ளது. சென்னையின் முக்கிய வீதியான மவுண்ட் ரோட் 'அண்ணா சாலை' என அவரது பெயரால் பெயர் மாற்றம் செய்யப்பட்டு, சிலை கூட அங்கு அமைக்கப்பட்டது. மேலும் 'அண்ணா நூற்றாண்டு நூலகம்' அண்ணாதுரை என்ற உயர்ந்த மனிதருக்கு காணிக்கையாக 2010ஆம் ஆண்டு சென்னையில் நிறுவப்பட்டது.

(செப்டம்பர் 15 பேரறிஞர் அண்ணா பிறந்த நாள்) ❖

"Printed by : Thiru K.P.Thiyagaraajan Published by : D.SIVAJOTHI, onbehalf of Tamilnadu Revenue Official's Association, No. 12, Krishnappa Street, Chepauk, Chennai - 600 005 and Printed at at Kalaiyaram Printers, 182, Bells Road, Triplicane, Chepauk, Chennai - 5. Phone : 2854 8223 and published from No. 12, Krishnappa Street, Chepauk, Chennai - 600 005. Editor : K.C.RAMKUMAR



கன்னியாகுமரி மாவட்டத்தில் புதிதாக தேர்வு செய்யப்பட்டுள்ள மாவட்ட நிர்வாகிகள், மாவட்டத் தலைவர் திரு.வினோத் தலைமையில் கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.பிரசாந்த் வடநேரே, இ.ஆ.ப.அவர்களை சந்தித்தனர்




நாகப்பட்டிணம் மாவட்டத்தின் புதியநிர்வாகிகள் பதவி ஏற்பு விழா 25.8.2019 அன்று நடைபெற்றது. இதில் மாவட்டதலைவர் திரு.எல்.பிரேம்சந்திரன், மாவட்டச் செயலாளர் திரு.இளவரசன் மற்றும் மாநிலத் துணைத் தலைவர் திரு.வி.சோமசுந்தரம் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.



திருவள்ளூர் மாவட்டத்தில் 3.8.2019 அன்று தமிழ்நாடு வருவாய்த்துறை அலுவலர் சங்க அமைப்பு தின விழா கொண்டாடப்பட்டது. இதில் முன்னாள் மாநில பொருளாளர் திரு.ஜி.இளங்கோவன், மாவட்ட நிர்வாகிகள் மற்றும் ஊழியர்கள் திரளாக கலந்து கொண்டனர்.

"VARUVAITHURAI ALUVALAR SANGA KURAL"
September 2019

Under Postal Regd No. : TN/CH(C) / 295 / 15-17
RNI No. TN BIL 2000 / 3800 Dt : 6.6.2002

தமிழ்நாடு வருவாய்த்துறை அலுவலர் சங்கத்தின் 55வது அமைப்பு தினம் 3.8.2019 அன்று ஈரோடு மாவட்ட மையத்தில் கொண்டாடப்பட்டது. இதில் மேனாள் மாநில பொதுச் செயலாளர் திரு.கே.ராஜ்குமார் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றினார். உடன் மாநில தலைவர் திரு.கு.குமரேசன் மற்றும் மாவட்ட நிர்வாகிகள்.




Publishing Date 3rd Week of Every Month
Posting Date : 24.09.2018
Registered New Paper
POSTED AT EGMORE RMS/1 PATRIKA CHANNEL
POSTED WITHOUT PRE-PAYMENT SYSTEM /
UNDER LICENCE NO. TNPMG (CCR) / WPP. 3 / 2015-2017

பெறுநர் :
திரு / திருமதி

If undelivered Please Return to :
சங்கம் : 2859 3458
தமிழ்நாடு வருவாய்த்துறை அலுவலர் சங்கம்
ப.எண். 38/2, புதிய எண். 12,
கிருஷ்ணப்ப தெரு, சேப்பாக்கம்,
சென்னை - 600 005

Published by : **D.SIVAJOTHI**, onbehalf of Tamilnadu Revenue Official's Association, Old No. 38/2, New No. 12, Krishnappa Street, Chepauk, Chennai - 600 005 from the above address and printed by : Thiru K.P.Thiyagaraajan at Kalaiyaram Printers, 182, Bells Road, Triplicane, Chepauk, Chennai - 5. Phone : 2854 8223. Editor : **K.C.RAMKUMAR**